உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும்
ஒரு தமிழ்ப்பத்திரிகை.

பத்திராசிரியர்— { ரா. இராகவையங்கார்,
ஸேது ஸம்ஸ்தான வித்வான்.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்—திருவள்ளுவர்.

தொகுதி-உ.] சோபகிருதுஹு கார்த்திகைமீ [பகுதி-க.

உள்ளுறை.

ஆவிநன்குடி.— } பத்திராசிரியர். க-சு
ஆராய்ச்சி.—
உலகில் உயர்ந்தார் யார்? —ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. சு
உவமாலங்காரம்.—அ. குமாரசுவாமிப் பிள்ளை. கங
தருக்கசூத்திர முதற்பாடம்.—எஸ். பால்வண்ணமுதலியார். கஎ
பரிமேலழகருரையும் } கல்குளம்-குப்புசாமி முதலியார். உங
திருக்குறளும்.
அநுமானவிளக்கம்.—திரு. நாராயணையங்கார். கஎ
விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்.—சே. ப. நரசிம்மலு நாயடு. ஙங
திருநூற்றந்தாதி (உரையுடன்).—அவிரோதியாழ்வார். சக
பன்னிருபாட்டியல்.— க

மதுரை:
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.
1903.

வருஷம் ஒன்றுக்கு ரூ. ௩.] [தனிப்பிரதி அணா 8.

விசேஷ விளம்பரம்.

நான்காந் தமிழ்ச்சங்க ஸ்தாபகராகிய ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத் தேவரவர்களுக்கு, அவர்கள் வித்தியாபிமான சின்னமாகச் சமர்ப்பிக்கப்பட்ட

பாரதச் சுருக்கம்.

இது செந்தமிழ் வசனசிங்கமென்று பிரபலபண்டித சிரோன்மணிகளாற் புகழப்படுபவரும் அபிதானகோச முதலிய பல நூல்கள் செய்தவருமாகிய மகா-ா-ா-ஸ்ரீ ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது.

இந்நூல் வடமொழியிலே வேதவியாசரால் ஓரிலட்சத்து இருபத்தையாயிரம் சுலோகங்களாற் செய்யப்பட்டதும் எத்தனை முறைதான் படிக்கினும் துறைதெரியாப் பெரும்பரப்பினையுடையதுமாகிய மகாபாரதத்தை ஆண் பெண் இருபாலாரும் எளிதிலுணர்ந்துகொள்ளுமாறு புதிதாகத் தமிழிலே சுருக்கிச் செய்யப்பட்டது.

இதன் விலை ரூ. 1—8—0

Apply to:—

Messrs. Higginbotham & Co.,
Mount Road,
Madras.

௨

கடவுள்துணை.

செந்தமிழ்.

தொகுதி-௨.] சோபகிருதுஸு கார்த்திகைமீ [பகுதி-க.

[இது செந்தமிழ் இரண்டாம் தொகுதியின் முதற்பகுதியாகும். செந்தமிழ் நண்பர் பலரும் பேரன்பு கூர்ந்து கல்வியானும் செல்வத்தானும் நன்குதவியமையானே, இதன் முதற்றொகுதி இனிது முற்றியதாகும். அங்ஙனம் உதவியருளிய செந்தமிழ்ச் செல்வர் பெருநன்றி என்றைக்கும் என்னாற் பாராட்டற் பாலது. மாறுபாடில்லாப் பேரறிவாளர் இங்ஙனம் பத்திரிகை வாயிலான் ஒருங்கு குழீஇ மகிழ்தலினும் உயிர்க்குச் சிறந்த வின்பம் யாண்டுளது? திருவொடு கூடிய தெள்ளியோரெல்லாம், 'இரப்பவர்க்கீயவைத்தார்' எனவும் 'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு-காமுறுவர் கற்றறிந் தார்.' எனவும் வரும் அரிய பெரியார் திருவாக்குகளை நன்குணர்ந்தவராவர்; ஆதலால் இத்தொகுதியினை முன்னதினுஞ்சிறக்க வேண்டுவன புரிவர் என உறுதி பெரிதுமுடையேன். இதனான் எய்தும் புகழும் புண்ணியமும் அவ்வுபகாரிகளுடையனவே யென்பது திண்ணம்.] — பத்திராசிரியர்.

ஆவிநன்குடி.

——:o:——

முற்காலத்து இத்தமிழகத்து ஆவியர் என்னும் பெயரில் ஓர் குடியினர் இருந்தனரென்பதும், தமிழ் வள்ளல்கள் எழுவரி லொருவனான பேகன் என்பான் அக்குடிப்பிறந்தானும் அவரிற் சிறந்தானும் ஆவன் என்பதும்

"அருந்திற லணங்கி னாவியர் பெருமகன்
பெருங்க லடன் பேகனும்"

எனவருஞ் சிறுபாணாற்றுப் படையானும்,

"அதுமனெம் பரிசிலாவியர் கோவே"

எனவரும் புறப்பாட்டானும் (கசஎ) நன்கறியலாகும்.

"வண்டுபடத் ததைந்த கண்ணி யொண்கழ
லுருவக் குதிரை மழவ ரோட்டிய
முருக னற்போர் நெடுவே ளாவி
யறுகோட் டியானைப் பொதினி யாங்கண்"

(அகம்-க) எனவும்,

"முழவுறழ் திணிதோ ணெடுவே ளாவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி"

(அகம்-சுக) எனவும் வரும் அகப்பாட்டுக்களானும், "நெடுவேளாவி-குறுநிலமன்னன். பொதினி - ஆவிமலை" எனவரும் அதனுரையானும் பொதினியிடத்து ஆவி என்னும் பெயரில் ஓர் குறுநில மன்னனிருந்தமை தெளியலாகும். ஆவியர் என்பார் ஆவிவழித் தோன்றியோராதலால் இவ்வாவி அவ்வாவியர் குடிக்குமுதல்வனாதல் தெள்ளிது. அரிசில்கிழார் என்னும் புலவராற் பாடப்பட்ட தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை என்னுஞ்சேரமானுடைய தாயாகிய பதுமன்றேவையின்றந்தைக்கு வேளாவிக்கோ என்பது பெயராதல் பதிற்றுப்பத்தினுள் எட்டாம்பத்தின் பதிகத்தாலறியலாவது. அரிசில்கிழார் பேகனாற்றுறக்கப்பட்ட கண்ணகி என்பவளை அவனோடு சேர்த்தல்வேண்டி அவனைப்பாடினர் என்பது கசசு ஆம் புறப்பாட்டான் அறியப்படுதலால் வேளாவிக்கோவின் மகண் மகனாகிய தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையும், பேகனும் ஒருகாலத்தவராதல் நன்குணரலாகும்.

தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறைக்கு வேளாவிக்கோ என்பான் மாதாமகராய் அணிமைக்காலத்தவனாதலின் பேகன் என்னும் வள்ளற்கும் அவன் அணிமைக்காலத்தவனாவன். இத்துணை அணிமைக்காலத்தே இவ்வேளாவிக்கோவின் வழித்தோன்றியோர் பெருகிச்சிறந்து ஆவியர் எனக் குடிபற்றிய பெயரான் வழங்கப்பட்டன ரென்றலினும் இவ்வேளாவிக்கோவுக்கும் முற்பட்ட சேய்மைக்காலத்தே ஆவியென்னும் பெயரான் ஒருவனிருந்தனன் எனவும் அவன் வழியினரே ஆவியரெனவும் இவ்வேளாவிக்கோவும் பேகனும் அக்

குடியினரவர் எனவும் கொள்ளுதல் தகுதியுடைத்தாகும். இங்ஙன மன்றி இவ்வேளாவிக்கோவே ஆவியர்குடிமுதல்வனாகிய ஆவி எனக் கொண்டு அவன் தானுளனாய காலத்தே தன்வழிபெருகவும் தன் பெயர் சிறக்கவும் நின்றான் எனக்கூறினும் இழுக்காது. சேரர் தலைநகராகிய வஞ்சிப் புறத்து வேளாவிக்கோமந்திரம் என்னும் பெயரில் ஒரு மாளிகை யிருந்தமை,

> "பேரிசை வஞ்சி மூதூர்ப் புறத்துத்
> தாழ்நீர் வேலித் தண்மலர்ப் பூம்பொழில்
> வேளா விக்கோ மாளிகை காட்டி"

எனவரும் சிலப்பதிகார நடுகற்காதையடிகளான் அறியப்படுவது. பேகன் என்னும் வள்ளலை வையாவிக்கோப்பெரும்பேகன் எனவும் வழங்குவரென்பது கசக-ஆம் புறப்பாட்டான் அறியலாகும். ஆவியர்குடியிற்பிறந்து சிறத்தலான் அக்குடிமுதல்வனான ஆவியின் பகுதிப்பட்டானாகச்சிறப்பித்து வையாவி என வழங்கினர்போலும். வை - பகுதி; "வைக்கோலுங்கூர்மையும் பகுதியும் வையெனல்" என்பது பிங்கலம். இத்துணையுங்கூறியவாற்றான் ஆவிஎன்னும் குறுநிலமன்னன் பெயர்ப்பெருவழக்கு நன்று தேறப்படும். இனி ஆய் என்னும் வள்ளலிருந்த ஊர் ஆய்குடிஎன வழங்கப்பட்டவாறுபோல இவ்வாவியிருந்த நல்லூர் ஆவிநன்குடி என வழங்கப்பட்டதாகும் என்பது தெள்ளிது. முருகக்கடவுள் திருப்பதிகளுளொன்றாய் இக்காலத்து ஆவினன்குடி எனவும் பழனிமலை எனவும் வழங்கப்படுவதே இந்த ஆவிநன்குடியாகவும் இவனுடைய பொதினிமலையாகவும் கொள்ளல் பொருந்திற்றாகும்.

பழனியில் ஓர்குளம் இன்றைக்கும் வையாபுரி (வையாவிபுரி) என்னும் பெயரான் வழங்கப்படுவது பலரும் அறிவர். இதுவும் முன்னுரைத்த வையாவி என்னும்பெயர் வழக்கினைப் புலப்படுத்தல் கண்டுகொள்க. முன்னை அகப்பாட்டில் முருகன், நெடுவேள் என வந்த பெயர்கள் அப்பொதினிமலைக்கண் முருகக்கடவுள் கோயில் கொண்டமை அறிவுறுக்கும். பொதினி என்பது பிற்காலத்துப் பழனி எனச் சிதைத்து வழங்கப்பட்டதுபோலும்.

ஆவிநன்குடி - ஆவினன்குடி
வையாவி - வையாவிபுரி
பொதினி - பழனி

இவற்றை ஆராய்ந்துகொள்க. மதுரைக்குத் தெற்கே ஒரு காததூரத்து ஆவியூர்என்னும் பெயரில் ஒரூருள்ளது. இதுவும் இவ்வாவியின் பெயராற் பல ஊர்கள் வழங்கப்பட்டமையினை வெளிப்படுக்கும்.

பத்திராசிரியர்.

ஆராய்ச்சி.

——:o:——

கபில ரதிகமான் காற்குறவர் பாவை
முகிலனைய கூந்தன் முறுவை—நிகரிலா
வள்ளுவ ரவ்வை வயலூற்றுக் காட்டிலுப்பை
யெண்ணி லெழுவ ரிவர்.

இவ்வரிய வெண்பா இச்சங்கத்திற்குக் கிடைத்த ஆத்திசூடி முதலியன அடங்கிய மிகப்பழையதோர் * ஏட்டில் கண்டது.

'அறப்பயன் றீரின்' என்னும் ஞானமிர்த அகவலுள் :—
'யாளி, கூவற்றாண்டு மாதப் புலைச்சி
காதற் சரணி யாகி மேதினி
யின்னிசை யெழுவர்ப் பயந்தோளீண்டே'

எனவுரைத்ததனானும், இதனுரையுள்:--'யாளிதத்தன் தனக்கு விகிர்தமாய் தன்னாலே வெட்டுண்டு கிணற்றில்வீழ்த்தப்பட்ட அறிவில்லாத சண்டாளப்பெண்ணை ஓர் பிராமணன் எடுத்துக்கொண்டு போய் உத்தர பூமியில் வளர்த்து இவனுக்கே பின்னர்க்கொடுக்க இவனுக்கு அவள் காதலித்த பார்ப்பனியாய் இந்நிலவுலகின்கண்ணே இனிய கீர்த்தி பெற்ற கபிலர் முதலாகிய பிள்ளைகளெழுவரை ஆங்குப்பெற்றாளன்றோ?' எனக்கூறுதலானும் இவ்வெழுவர் பிறப்பு வரலாறு ஒருவாறு உணரப்படும்.

* இவ்வேடு இச்சங்கத்திற்கு ஏடுதேடுவோராகிய சேற்றூர் வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ கந்தசாமிக் கவிராயரவர்கள் நன்முயற்சியாற் கிடைத்தது.

இவ்வேட்டிற் றமிழ்கற்குஞ் சிறுவர்க்குப் பெரிதும் பயன்படத் தக்க நூல்கள் சில கோக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முதற்கண் உள்ளது :—

போற்றிமாலை யென்பது இது சிவபிரான் நாமங்களை மொழிக்கு முதலாம் எழுத்துக்களின் அடைவேகொண்டு இருசீரடியான் வருவது.

உதாரணம்;—ஆறணிகடவுள்.
இளம்பிறை சூடி.
எனவரும்.

மற்றொன்று,—நீதியொழுக்கம் என்பது. அது சிலவாய நல்லொழுக்கங்களைப்பற்றி முச்சீரடியான் வருவது.

உ-ம். காலா லெழுத்தைக் கீறாதே.
மூத்தோர் சொல்லைப் பழியாதே.
எனவரும்.

இதனிறுதியில் 'எல்லாநீதியும் இப்படியே, என்று பெரியோர் சொல்வார்கள்; கல்லாரும் பொழில் செங்கோட்டுக், கந்தசுவாமி திருப்புகழே. என்றுள்ளது.

வேறொன்று,—கல்வியொழுக்கம் என்பது. இது மொழிக்கு முதலாம் எழுத்துக்களின் அடைவே நாற்சீரடியான் வருவது.

உ-ம். ஈட்டிய பொருளின் எழுத்தே யுடைமை.
சிறுமையிற் கல்வி சிலையி லெழுத்தே.
எனவரும்.

இன்னுமொன்று,—பாண்டியன் கலிப்பா என்பது. இது பாண்டியன்மேல் இன்பம்பற்றி வருவது.

உ-ம். முன்னொருத்தி கூந்தன் முடிப்பித்தாய் தீவினையேன்
பொன்னொருத்தி கூந்தன் முடிக்கரிதோ போர்வீரா.

முன்றி லெங்கு நிறைந்தது வெண்ணிலா
மூரி வார்டை பரந்ததிவ் வூரெலா
மின்றென் மான்விழி துஞ்சுவ தெங்ஙனே
யிந்து வின்குல ராச முகுந்தனே. எனவரும்.

பிறிதொன்று,—கொன்றை வேந்தன் என்பது. இப்பொழுது வழங்குவதற்கும் இதற்கும் பாடபேதம் சிறிதுள்ளது. அவை வருமாறு.—

ஈயா தீட்டிற் றீயார் கொள்வர்.
சூரிய னாகிலும் வீரியம் பேசேல்.
கேட்ட லுறுதி கூட்ட முடைமை.
கோச்செவிக் குறளை காற்றுட னெருப்பு.
கௌவை சொல்லி லெவ்வ ரும்பகை.
சான்றோ ரென்கை யீன்றோர்க் கின்பம்.
சினத்தைப் பேணிற் றனத்துக் கழிவு.
சொக்க ரெனபவ ரத்தம் பொதிவர்.
நான்மறை தெரிந்தோர் சீலத் தொழுகு.
பையச் சென்று வையந் தங்கு.
மெத்தெனப் படுத்தல் நித்திரைக் கழகு.
மைவிழி யார்தமைக் கையகன் றொழுகு.

மற்றது.—சுந்தரபாண்டியன்றொகுதி யென்பது.

இஃது இக்காலத்து வெற்றிவேற்கை யெனவும், நறுந்தொகை யெனவும் பெயர் பெற்று வழங்குவதாகும்.

இது பாடபேதமுடையதனோடு இப்பொழுது வழங்காத சில அரிய அடிகளையும் உடையதாகும். அவை வருமாறு.—

சிறியோர்க் கழகு பெரியோரைச் செறிதல்.
பெரியோர்க் கழகு பிழைபல பொறுத்தல்.

தேன்படு பெண்ணைத் திரள்பழத் தொருவிரை
வானுற வோங்கி விசும்புற நிமிரினு
மொருவற் கிருக்க நிழலா காதே.

கற்றோ ரெல்லா மறிஞரு மல்லர்.

சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராகிற் பொறுக்கவும் வேண்டும்;
சிறியோ ரப்பிழை செய்தில ராகிற்
பெரியோர்க் கப்புகழ் பெறுதலு மரிதே.

* குஞ்சரந் தன்னைக் கோடழிக்கும் பாம்பு
பைம்பொறி மஞ்ஞைக் கிரையா கும்மே;
பாம்பின் பைத்தலை கொத்தும் மஞ்ஞை
கோம்பிக் கஞ்சு மதனே போலப்
பெண்டிற் கஞ்சும் பேதை யாண்மகன்
கண்டுழிக் கண்டுழி விருந்தஞ் சும்மே.

அறுசுவை யடிசி லமர்ந்திருந் துண்டவர்
குடிமிசை பிடகை கூறினுங் கூறுவர்.

பிறப்புஞ் செல்வமும் பெருமையு முடையோ
ரறக்கூழ்ச் சாலை யடையினு மடைவர்;
அறக்கூ ழுண்டடங் கந்நிலை திரிந்தோ
ரெமக்கும் பிறர்க்கு முதவினு முதவுவர்.

ஓத்துண ரந்தண ரொழுக்கங் குன்றிப்
பாப்பு மறந்தோன் பதரெனப் படுமே.

அங்கண்மா ஞாலத் தரசுவீற் றிருந்து
வெங்கலி கடியா வேந்தனும் பதரே.

நன்மனைக் கிழத்தி தன்மனை யிருக்கப்
பிறன்மனைக் கிரங்கும் பேதையும் பதரே.

வித்தை கல்லா வெற்றுடம் பொருவனுங்
கொச்சை மக்களும் பதரெனப் படுமே.

---

* "கோம்பிக் கொதுங்கிமே யாமஞ்ஞை குஞ்சரங் கோளிழைக்கும்
பாம்பைப் பிடித்துப் படங்கிழித் தாங்கப் பணைமுலைக்கே
தேம்பற் றுடியிடை மான்மட நோக்கிதில் லைச்சிவன்று
ளாம்பொற் றடமலர் சூடுமென் னாற்ற லகற்றியதே" என்னுந் திருச்சிற்றம்பலக்கோவையினையும் ஈண்டைக்கு நோக்கிக் கொள்க.

அல்ல லில்லை யறிவுடை யோற்கே.
யானைக் கில்லை கானமு மிருளும்.
இரும்புலிக் கில்லை யிரவும் பகலும்.
பெரும்படைக் கில்லை யரணுஞ் சிறையும்.
காமுகற் கில்லை நாணமு மச்சமும்.
விரைந்தோற் கில்லை நாளுங் கோளும்.
இல்லோற் கில்லை யிருந்து வாழ்தல்.
எல்லா மில்லை சொல்லறியார்க்கே.

பெரும்வழக் குடையோன் பெற்றி லாமையான்
மனமுற மறுகிநின் றழுத கண்ணீர்
முறைமுறை கேளா மூவர் காக்கினும்
வழிவழி யீர்வதோர் வாளா கும்மே.

இதனிறுதியில்,—

தென்னவன் மணிதிகழ் திருமே னியனார்
மன்னவன் மேலே வளம்பட நின்றவ
னிந்திரன் மேலே யினவளை யெறிந்தவன்
செந்தமிழ்க் காரி சிறப்புக ளுடையோன்
சந்திர குலபதி சுந்தர பாண்டியன்
றொகுதி முற்றும்.

என்றுள்ளது.

இவற்றோடு ஆத்திசூடியும், மூதுரையும், நல்வழியும் உள்ளன. அவற்றிற் கண்ட பாடபேதங்களையும், இக்காலத்து அரியவாய் அவற்றிலுள்ள சிலபாடல்களையும் அடுத்த பகுதியில் வெளியிடுவேன்.

பத்திராசிரியர்.

உலகில் உயர்ந்தார் யார்?

இவ்வினவுக்குப் பலரும் பலவாறாக விடையளிப்பராயினும், யாங்கூறுவது, எந்நிலத்து மக்கள் தம் பாஷையை வளர்க்கின்றாரோ அந்நிலத்து மக்களே பூமுகத்துயர்ந்துளாரென்பது. இவ்வுண்மை ஆங்கிலேயர் பிராஞ்சியர் ஜர்மானியர்களிடத்தும் அமெரிக்கர் ஜப்பானியர் முதலியோரிடத்தும் பிரத்தியக்ஷமாம். இவர்களே பூமுகத்தில் உயர்ந்தநிலையுடையாரென யாவராலும் மதிக்கப்படுபவர்கள்.

இவர்கள் தம் பாஷையை யாது செய்துவருகின்றார்கள்? ஆதிமுதல் இடையறாமலே வளர்த்துவருகின்றார்கள். எப்படி வளர்த்துவருகின்றார்கள்? தத்தம் பாஷையிலுள்ள நூல்களைக் கிரமமாக ஆராய்ந்தும், காலந்தோறும் பயன்படத்தக்க நூல்களை இயற்றியும், தம்பாஷையிலில்லாத நூல்களைப்பிறபாஷையினின்றும் மொழிபெயர்த்தும், பலவகை வித்தியாசாலைகளை இடங்கள் தோறும் ஸ்தாபித்தும், கல்விகற்கப் பொருளில்லாத ஏழைப்பிள்ளைகளைப் பொருள் கொடுத்துக்கற்பித்தும், பலதுறைப்பட்ட சாஸ்திரங்களிற் கூறப்பட்ட பொருள்களை அநுபவத்திற் காண்டற்கும், பொறியுணர்ச்சிக் கெட்டாத பொருள்களை நாடியாராய்ந்து சித்தாந்தஞ் செய்தற்கும் முன்னர் ஆராயப்படாத பொருள்களை ஆராய்தற்கும் வேண்டும் இடம் பொருளேவல் எல்லாந்தந்துதவியும் வளர்த்துவருகின்றார்கள்.

இவ்வாறாகத் தத்தம் பாஷைகளை வளர்த்தலால் அவரெல்லாம் பலதுறைப்பட்ட கல்விகேள்வியுடையராய் விளங்குகின்றார்கள். கல்வியால் ஆன்ற அறிவும், அறிவாற் பொருளும், பொருளால் வலிமையும், வலிமையால் விளக்கமும், விளக்கத்தால் உயர்வுமுடையராயினர்கள். ஆதலால் தம்பாஷையை வளர்ப்பவர்களே உயர்ந்தாராவர் என்பது வெள்ளிடைமலையாம். அதுவொன்றோ! தத்தம் பாஷையை வளர்க்கச்செய்யு முயற்சி, தத்தந் தேசத்தை உயர்விக்கச்செய்யு முயற்சியாம். அம்முயற்சியினுஞ் சிறந்த தேசாபிமானமும் பேரறமும் பிறிதொன்றில்லையாம்.

நந் தமிழ்ப்பாஷை அபிவிருத்தியுற்றிருந்த ஞான்று நம் முன்னோரிருந்த நிலையென்ன? நந்தமிழ்மொழி வளர்ப்பாரின்றிக் குன்றிய இக்காலத்து நமது நிலையென்ன? தமிழ் வளர்ந் தோங்கிய தசையிலிருந்தஞான்று நம்முன்னோர் நிலை நமது நிலையிலும் பன்னூறுமடங்குயர்ந்ததன்றோ. அவருண்டதும் தமதுணவே. அவருடுத்ததும் தமதாடையே. அவர் வாழ்ந்ததும் தமது மாளிகையே. அவரணிந்ததும் தமது பொன்னே. அவரேறியதும் தமதிரதமே. அவர் பூசியதும் தமது வாசமே. அவரிருந்ததும் தமது நாடே. அவராண்டதும் தமதரசே. அவர் சேவித்ததும் தமதரசே. அவரோடியதுந் தங் கடலே. அவரோட்டியதும் தம்மரக்கலமே. அவர் வழிபட்டதும் தந் தெய்வமே. அவர் கும்பிட்டதும் தங்குருவே. அவர் பேசியதும் தம்பாஷையே. அவர் ஓதியதும் தமதுநூலே.

அஞ்ஞான்று நம்முன்னோர் தமதுநாட்டிற் பிறர்வந்திரப்பதும் ஒதுங்குவதுமன்றிப் பிறர் நாட்டிற் சென்றிரந்து மொதுங்கியுமறியார். வாணிகத்தின் பொருட்டும் வெற்றியின்பொருட்டுங் கடலோடுவதன்றி இந்நாளில் மோரிசு முதலிய தீவாந்தரங்களுக்கு வாளா வயிறுவளர்க்கு நிமித்தம் கடலோடுவதுபோற் கடலோடியறியார். பிறரை ஏவல்கொண்டதன்றிப் பிறர்க்கு ஏவல் பூண்டறியார். அவர் தமது கைவினைப் பொருளைப் பிறர் வந்து கொள்வதன்றிப் பிறர் கைத்தொழிற் பொருளைத் தாங்கொள்ளலுமறியார்.

அவர் பிறர்பாற் கொள்ளக் கிடந்த காருக கம்மியப்பொருள் யாதுமில்லையென்பதும், தமக்குவேண்டுங் கைவினைப் பொருளெல்லாம் தாமே இயற்றிக்கொண்டன ரென்பதும்,

“வேயா மாடமும் வியன்கல விருக்கையு
மான்கட் காலதர் மாளிகை யிடங்களும்
கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவன ரிருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையு மிலங்குநீர் வரைப்பும்
வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணறுஞ் சாந்தமும்
பூவும் புகையு மேவிய விரையும்

பகர்வனர் திரிதரு நகர வீதியும்
பட்டினு மயிரினும் பருத்தி நூலினுங்
கட்டு நுண்வினைக் காருக ரிருக்கையும்
ஆரமு மகிலுந் தூசுந் துகிரு
மாசறு முத்து மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோ டளந்துகடை யறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலங் குவித்த கூல வீதியும்
காழியர் கூவியர் கண்ணொடை யாட்டியர்
மீன்விலைப் பரதவர் வெள்ளுப்புப் பகருநர்
பாசவர் வாசவர் பன்னிண விலைஞரோ
டோசுநர் செறிந்த வூன்மலி யிருக்கையும்
கஞ்ச காரருஞ் செம்புசெய் குநரு
மரங்கொ றச்சருங் கருங்கைக் கொல்லரும்
கண்ணுள் வினைஞரு மண்ணீட் டாளரும்
பொன்செய் கொல்லரு நன்கலந் தருநரும்
துன்ன காரருந் தோலின் றுன்னரும்
கிழியினுங் கிடையினுந் தொழில்பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களுங்
குழலினும் யாழினுங் குரன்முத லேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டு
மரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கையுஞ்
சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுவின்றி விளங்கு மருவூர்ப் பாக்கமுங்
கோவியன் வீதியுங் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்குடி வணிகர்
மாட மறுகு மறையோ ரிருக்கையும்
வீழ்குடி யுழவரொடு விளங்கிய கொள்கை
யாயுள் வேதருங் காலக் கணிதரும்
பால்வகை தெரிந்த பன்முறை யிருக்கையுந்

திருமணி குயிற்றுநர் சிறந்த கொள்கையொ
டணிவளை போழுந ரகன்பெரு வீதியுஞ்
சூதர் மாகதர் வேதா ளிகரொடு
நாழிகைக் கணக்கர் நலம்பெறு கண்ணுளர்
காவற் கணிகைய ராடற் கூத்தியர்
பூவிலை மடந்தைய ரேவற் சிலதியர்
பயிறொழிற் குயிலுவர் பன்முறைக் கருவியர்
நகைவே ழம்பரொடு வகைதெரி யிருக்கையும்
கடும்பரி கடவுநர் களிற்றின் பாகர்
கொடுந்தே ரூருநர் கடுங்கண் மறவர்

எனவருங் காவிரிப்பூம் பட்டினத்துச் சிறப்புரைத்த சிலப்பதிகாரச் செய்யுளால் விளங்கும்.

நம்முன்னோர் இங்ஙன முயர்ந்திருந்த வக்காலத்தில் அவர் வைதிக நெறிக்குரிய நூல்களை மாத்திரமன்று உலகிய னெறிக்குரிய நூல்களையு மொருங்கே கற்றுவந்தனர். பிராமணர் வைதிக நூல்களும், க்ஷத்திரிய குலத்தினர் யுத்தசாஸ்திரங்களும் அறநூல்களும், வைசியர் அர்த்தசாஸ்திரங்களும், சூத்திரர் காருககம்மிய முதலிய கைத்தொழிற்குரிய நூல்களும் விசேஷமாகக் கற்றும் கற்றதைச் செய்தும் உலகியனெறி தளராவண்ணம் பாதுகாத்துவந்தனர். அதனால் அவர்கள் சுவாதீனர்களாய் நம்மிலும் உயர்வுடையர்களாய் விளங்கினார்கள். பிற்றைநாட் பாண்டியர் தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் அலக்ஷியஞ்செய்யத் தலைப்பட்டனர். அன்று தொட்டது தமிழ் நாட்டிற்கு விபரீத காலம். அதன்பின்னரே உட்பகைகளாலும் வேற்றரசர் படையெடுப்பாலும் தமிழரசு வீழ்ந் தொழிவதாயிற்று.

நம் முன்னோர்நாகரிகம் அவர்காலத்துக்கே ஏற்றது. காலந்தோறுங் காலவியல்பு மாறுதலின், மாறுபட்ட இக்காலத்துக்கு அக்காலத்து நாகரிகமெல்லாம் பொருந்தவேண்டு மென்பது ஆவசியகமன்று. பொருந்துவதைக்கொள்ளலும், பொருந்தாததைத் தள்ளலும், பொருந்தத்தக்க புதியனவற்றைத்தழுவுதலும் வேண்டும்.

ஆதலால் பழையநூல்களுள்ளும் வேண்டுவனவற்றைக்கற்றும், வேண்டாதனவற்றைத்தள்ளியும், இந்நாளைக்கு ஏற்ற புதிய நூல்க

ளைச்செய்தும், பிறபாஷைகளிலுள்ள நூல்களை மொழிபெயர்த்தும், முன்னுளிலிருந்தருகிய பயன்படு நூல்களைத்தேடிப் பிரகடனஞ் செய்தும், வித்தியாசாலைகளை இடங்கடோறும் வாணிகநோக்கி யன்று வித்தியாபி விருத்தி நோக்கித் தாபனம் பண்ணியும், கைவினை நூல்களும் கைவினைப்பயிற்சியும் தமிழிலே பயிற்றும் வித்தியாசாலைகளை நாட்டியும், சோதிடசாஸ்திரம் ரசாயன சாஸ்திரம் பிரகிருதி சாஸ்திரமுதலியன தமிழிலே பயிலத்தக்க வித்தியாசாலைகளையும் அவற்றுக்கு வேண்டும் யந்திரக்கூடங்களையும் ஸ்தாபித்தும் தமிழ்ப் பாஷையை வளர்த்தாலன்றித் தமிழராகிய நாம் உயர்வதும் உயர்ந்தவருள்வைத் தெண்ணப்படுவதும் எக்காலத்து மில்லை.

இதனைத் தமிழ்நாட்டிற் பிறந்து விளங்கும் பெருந்தகைகள் சிந்திக்குமாறு அவரைப்பிரார்த்திக்கின்றேம்.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

உ

உவமாலங்காரம்.

ஆடவர் மகளிரென்னும் இருபாலார்க்கும் ஆடையாபரணங்கள் பேரழகினைச் செய்தல் போலப் பலவகைப் பாட்டுக்களுக்கும் பேரழகினைச் செய்வதுவாகிய அணிஇலக்கணமே ஐந்திலக்கணங்களுள்ளும் மிகச்சிறந்ததுவாகும். அணியெனினும் அலங்காரமெனினும் ஒக்கும். கம்பநாடரும் "பழுதிலாத பல்லலங்காரப் பண்பே" என்றூர். வடமொழியிலே அலங்கார நூல்கள் மிகப்பலவாகச் செய்யப்பட்டிருக்கின்றன. அவை; காவியாதர்சம், சாகித்திய தர்ப்பணம், சாகித்தியரத்தினகரம், சரசுவதி கண்டாபரணம், சித்திரமீமாஞ்சை, குவலயாநந்தம் முதலியன. இவைகளிலே சொல்லப்படும் அலங்காரங்களும் மிகப்பல. சிலவற்றிலே சிலவலங்காரங்கள் விசேடமாகக் கூறப்படினும் உவமை உருவகம் முதலிய அலங்காரங்கள் எல்லாவற்றினுங் கூறப்படுவனவாகும்.

பலவலங்காரங்களும் பிறத்தற்கு மூலமாய் நிற்றலானும், க பியங்களிற் பரந்து வருதலானும் உவமாலங்காரம் ஒன்றுமே அ யெல்லாவற்றுள்ளும் தலையாயதென்பர். தமிழ்ப்பாஷையிலே ஐ திலக்கணங்களையும் விரித்துக் கூறிய தொல்காப்பிய முனிவருட உவமாலங்காரம் ஒன்றினையே கூறி அதன் கண்ணே வேறு பல அல ங்காரங்களும் அடங்குமாறு செய்தனர். உவமையாவது பண்பு, தொழில், பயன் என்பன காரணமாகப் "பொருளொடு பொருள் புணர்த்தொப்புமை தோன்றச் செப்புவது" என்று தண்டியாசிரியர் கூறுவர். இரசகங்காதரகாரர் 'ஸாத்ருஶ்யம் ஸுந்தரம் வாக்யார்தோபஸ்காரகமுபமாலங்க்ருதி' என்பர். தொல்காப்பியர் வினை, பயன், வடிவு, வண்ணம் என்னும் நான்கும் பற்றிச் சிறப்பு, நலம், காதல், வலி என்னும் நான்கும் இடனாக உவமை பிறக்கும் என்பர்.

தண்டியாசிரியர் இந்த உவமாலங்காரத்தினை விரியுவமை, தொகையுவமை, இதரேதரவுவமை, சமுச்சயவுவமை முதலிய பலவகையாக விரித்துக் கூறுவர். அவர் கூறிய விரியுவமையையுந் தொகையுவமையையும் "சுட்டிக்கூறாவுவமமாயின்" என்னுஞ்சூத்திரத்திலும் விபரீதவுவமையைப் "பொருளேயுவமஞ் செய்தனர்" என்னுஞ் சூத்திரத்திலும், இதரேதரவுவமையை "தடுமாறுவமம்" என்னுஞ் சூத்திரத்திலும், மறுபொருளுவமை முதலிய பலவுவமைகளை "வேறுபடவந்தவுவமத்தோற்றம்" என்னுஞ் சூத்திரத்திலும் அடக்கித் தொல்காப்பியர் கூறினர்.

மேலுந்தண்டியாசிரியர் கூறிய விபரீத வுவமையைப் பிரதீபாலங்காரம் என்றும், ஐயவுவமையை ஐயவணி என்றும், மறுபொருளுவமையைத் திருட்டாந்தவணி எனவும் பொதுநீங்குவமையை அநந்துவயாலங்காரம் எனவும் சயதேவர் முதலியோர் வேறாகக் கூறுவர்.

அப்பயதீக்கிதர் சித்திரமீமாஞ்சையிலே உவமை ஒன்றே வேறுபடுத்திக் கூறும் வகையினாற் பலவித அலங்காரங்களும் பிறக்கும் என்பர். அவர் கூறுமாறு சில கூறுதும்.

க. சந்திரன்போன்ற முகம் என்பது உவமையணி. இதனை வேறுபடுத்திக் கூற எத்தனையோ அலங்காரங்கள் பிறக்கும்.

உ. சந்திரனை ஒத்தது முகம்; முகத்தை ஒத்தது சந்திரன் என்பது உபமேயோபமை.

வெண்பா.

களிக்குங் கயல்போலு நின்கணின் கண்போற்
களிக்குங் கயலுங் கனிவாய்த்—தளிர்க்கொடியே
தாமரை போன்மலரு நின்முக நின்முகம்போற்
றாமரையுஞ் செவ்வி தரும்.

ங. முகம் போன்றது முகம் என்பது அநந்நுவயவணி; அநந்நுவயம்—இயைபின்மை.

வெண்பா.

தேனே யனையமொழிச் சேயிழையாள் செவ்வியினாற்
றானே யுவமை தனக்கு.

ச. முகம்போன்றது சந்திரன் என்பது பிரதீபாலங்காரம்; பிரதீபம்-பிரதிகூலம்.

ரு. சந்திரனைக்கண்டபோது முகத்தை நினைத்தேன் என்பது ஸ்மிருதிமதாலங்காரம்; நினைப்பணி.

வெண்பா.

காதலுறு கஞ்சமலர் கண்ட வெனதுமனங்
கோதைமுகந் தன்னைநினைக் கும்.

சு. முகமே சந்திரன் என்பது உருவகம்.

எ. முகசந்திரனாலே தாபம்நீங்கிற்று என்பது பரிணாமாலங்காரம்; பரிணாமம்—திரிபு.

அ. இது முகமா செந்தாமரைப்பூவா என்பது சந்தேகாலங்காரம்; சந்தேகம்-ஐயம்.

கூ. முகத்தினைச் சந்திரனென்று சகோரந் தொடர்கின்றது என்பது பிராந்திமதாலங்காரம்; பிராந்தி-மயக்கம்.

கo. முகத்தினைச் சந்திரனென்று சகோரமுந், தாமரைப்பூ என்று வண்டுங் களிப்படையும் என்பது உல்லேகாலங்காரம்; உல்லேகம்-பலவாகச்சொல்லுதல்.

கக. இது சந்திரன்; முகமன்று என்பது அபநுதியலங்காரம்; அபநுதி - உள்ளதனை மறுத்தல்.

வெண்பா.

மதியன் றிதுபுகலின் வானதியிற் றோன்றும்
புதிய தொருகமலப் பூ.

கஉ. சத்தியமாக இது சந்திரன் என்பது தற்குறிப்பேற்றம்.

கங. இது சந்திரன் என்பது அதிசயம்.

கச. சந்திரனையுந் தாமரைப்பூவினையும் தன்முகத்தால் வென்றாள் என்பது துல்லிய யோகிதை. துல்லியம்—ஒப்புமை. யோகிதை—கூட்டம்.

வெண்பா.

மாமதிதோன் றக்கணவர்த் தீர்ந்தமட வார்முகமுந்
தாமரைப்பூ வுஞ்சோர்ந் தன.

கரு. நின்முகமுஞ் சந்திரனும் நிசியிற் களிக்கின்றன என்பது தீபகாலங்காரம். தீபகம்—விளக்கு.

கசா. நான் முகத்தை விரும்புகின்றேன்; சகோரம் சந்திரனை விரும்புகின்றது என்பது பிரதிவஸ்தூபமை. பிரதிவஸ்து—எதிர்ப்பொருள்.

கஎ. விண்ணிலே சந்திரன் மண்ணிலே நின்முகம் என்பது திருட்டாந்தவணி; திருட்டாந்தம்—எடுத்துக்காட்டு.

கஅ. சந்திரனுடைய அழகினை முகந்தரிக்கின்றது என்பது நிதரிசனவணி; நிதர்சனம்—காட்சி.

கசூ. சந்திரனோடு சமமாக முகமகிழ்கின்றது என்பது சகோத்தியணி. சகோத்தி—உடன்சொல்லல்.

வெண்பா.

இகந்த பகைவ ரினத்தொடுவெல் வேந்தே
திகந்த மடைந்ததுநின் சீர்.

உ0. மறுவில்லாத முகம் சந்திரனின் மாட்சியுடையது. என்பது வியதிரேகாலங்காரம்; வியதிரேகம்—வேற்றுமை.

இவ்வாறே உவமாலங்காரம்ஒன்றினின்று பலவலங்காரங்கள் தோன்றின.

யாழ்ப்பாணத்துச்
சுன்னுகம்
சோபகிருது௵ ஆவணி௴

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப்பிள்ளை.

தருக்கசூத்திர முதற்பாடம்.

(முதற்றெகுதியின் ௬௧௫-வது பக்கத்தொடர்ச்சி.)

க. சிறப்பதிகாரம்.

16. இனி பல்வேறுவகைப்பட்ட அநேக பதார்த்தங்களுக்கு உரித்தாகிய உண்மைகளை நிச்சயித்து அறிவதற்கான பொதுவதிகாரத்தைப்போலன்றி ஒரு பொருளின்மாட்டு அவ்வுண்மைகளுள்ளன வாய்க்காட்டி நிற்றலை அறிவுறுத்துந் தன்மையினைக்குறித்து நடைபெறும் அதிகாரமாகிய சிறப்பதிகாரத்தை விளக்கிப் பின் அதன் இயன்முறை நிறுவுவாம்.

சிறப்பதிகாரம்; சிறப்பு-மேற்கோளினது அதிகாரத்தையுடையது என அன்மொழித் தொகையாய் இப்படலத்துக்குக் காரணக் குறியாயிற்று. (அதிகாரம் - அதிகரித்தல்) சிறப்பு மேற்கோளைக் குறித்து நுதலிவரும் பல வியலினது தொகுதி சிறப்பதிகாரமாயிற்று. இது முற்கோள்களிரண்டனுள்ளும் அமைந்துள்ள நடுவுறுப்பு அல்லது மத்தியபதத்தால் அநுமானிக்கப் பெறும் முடிவு மேற்கோளையுடையதாய் நடைபெறும். உதாரணமாக:—

நையாயிகப் —

(1) எல்லாப் பட்சிகளுஞ் சிறகுடையவைகளாயிருக்கின் றன. (பூர்வசாதனம்)
(2) குயில்கள் பட்சிகளாயிருக்கின்றன. (உத்தரசாதனம்)
(3) (ஆதலால்) குயில்கள் சிறகுடையவைகளாயிருக்கின் றன. (முடிவு மேற்கோள்)

இம்மூன்று மேற்கோளுஞ் சேர்ந்துதான் ஓர் சிறப்புநையாயித மெனப் பேர்பெறும். பூர்வசாதனம் - முக்கிய மேற்கோள்; உத்தர சாதனம் - குறைந்திடு மேற்கோள். இவையிரண்டும் முற்கோளெ னப் பெயர்பெறும், முன்சென்றுநிற்றலால்.

மேற்கூறிய மூன்று மேற்கோள்களுள் ஒவ்வொன்றும் மூன்று பகுதிகளையுடைய செயலினைக்குறித்துநிற்கும். முதலிரண்டினின்று மூன்றுவதாகிய முடிவு மேற்கோளீர்த்தனம். எக்கருவிகொண்டெ னில் அநுமானத்தாலென்க. அதுதான் யாதெனில் புத்திவிசாரஞ் செய்தலால் பல செயல்களினின்றும் ஒரு செயலினை வடித்தெடுத் துக்காட்டலாம். அஃதாவது முன்னறிந்த அறிவினின்று அதற்குச் சம்பந்தமான மற்றோர் அறிவுபெற்று நடத்துதலாம்.

அன்றியும் இங்கு மனமேற்கொண்டு தீர்மானித்த மூன்று வாக் கியங்கள் நமக்குஃமுன்னே வைக்கப்பட்டுள்ளன. ஆதலால் அவைகள் மேற்கோள்களாயின. இவற்றுள் முதல் மேற்கோள்,

'எல்லாப் பட்சிகளும் சிறகுடையவைகளாயிருக்கின்றன' வென்று நமக்குத் தெரிக்கிறது. இது மூன்று பாகங்களையுடையதா யிருக்கின்றது. எங்ஙனமெனில் :—

(எல்லாப்) பட்சிகள் (உம்) (1) உறுப்பு.

சிறகுடையவைகள் (ஆய்) (2) உறுப்பு.

இருக்கின்றன (3) சந்துமொழி.

இந்த மேற்கோள் இரண்டு உறுப்புகளையும் அவைகளை முடித் துக்காட்டும் ஒரு இசைமொழியையுமுடையது. 'எல்லாம்' என்னுஞ் சொல் எத்தனை பட்சிகள் அவ்வாறு சிறகுடையவைகளாயிருக்கின் றன வென்பதைக் குறித்துக் கூறுவதால் அது அளவுகாட்டு மொழி யெனப் பெயர்பெறும்.

மற்றிரு மேற்கோள்களையும் இவ்வாறு பிரித்தறிந்துகொள்க. இத்தருக்கவொழுங்குள் ஒவ்வோருறுப்பும் இருமுறை வரும்.

'குயில்கள்' 2-வது 3-வது மேற்கோள்களினும்

'பட்சிகள்' 1-வது 2-வது மேற்கோள்களினும்

'சிறகுடையன' 1-வது 3-வது மேற்கோள்களினும் வருதல் காண்க.

இதுகாறும் யாமறிந்தவாற்றால் இரண்டுறுப்புகள் முடிக்குஞ் சொல்லொன்றால் சேர்க்கப்படுங்கால் மேற்கோளாமென்றும், மூன்று மேற்கோள்களை மேற்கூறியாங்கு உடையதெதுவோ அது ஓர் நையாயிதம் (தருக்கவொழுங்கு) என்றுங்கண்டனம்.

(17) சரியான தருக்கவொழுங்கினை நிறுவுதற்கு மேற்கூறப் படும் விதிகள் மிக்கு அவசியமாதலின் அவைகளைத் தருக்கநூல் கூற வேண்டியதாயிற்று. அவ்விஷயங்களையெல்லாம் நன்றாய் அறிதற்பொ ருட்டு முதற்கண் உறுப்புவகைகளையும் பின்மேற்கோள்களின் பிரிவுக ளையும், இதன்பின் நையாயிதத் தொகுதிகளையும் முறையேவைத்துக் கூறுதல் இன்றியமையாததாம். இவ்விதமாக இச்சிறப்பதிகாரம் மூன்று முக்கியபிரிவினையுடையதாய் நடைபெறுதல் காண்க.

மேற்கோளுக்கு உறுப்பும், நையாயிதத்திற்கு மேற்கோளும் கருவியாய் அமைந்துள்ளனவாதலால் அக்கருவிகளைக் (உறுப்பு-மேற் கோள்) கூறி மேற்செல்வாம்.

(18) அக்கருவிகளையறிதற்கு மானதக்காட்சி, ஊகம், நியா யங்காண்டல் ஆகிய இம்மூன்றும்இன்றியமையாதவைகளாம். அவை வருமாறு :—

தருக்கசூத்திரம்.

(1) பொதுவாய்ப் பொருளியல் கருதல் மானதம்.
(2) கருதிடு மோரிரு வெண்ண மார்ந்த
ஒற்றுமை வேற்றுமை புணர்த லூகம்.
(3) மன்னிரு பொருட்குணம் வயங்குசம் பந்தந்
தன்னில் வடித்துறல் நியாயங் காண்டலே.

முதலாவது உறுப்பியல்.

(19) உறுப்பு, அங்கம், பெயர், பதம், மொழி என்பன ஒரு பொருட்கிளவிகள். இவ்வியல் மேற்கோளிற்கு அங்கமாய்வரும்

மொழிகளைப்பற்றிக் கூறுமாற்றல், உறுப்பியலெனப் பெயர்பெற்று நின்றது.

முன்னூறு பொருளின் பெயர்தரு மொழிகள் } தருக்கசூத்
பன்னிடி லுறுப்பெனப் பகர லாகும். } திரம்.

இவ்வுறுப்புகள் ஒருமொழி அல்லது பல்மொழிகளையுடையன வாய்வரும்.

(1) உ-ம். சாத்தன் அழகுடையவனுயிருக்கிறுன்.

இந்த மேற்கோளில் சாத்தனென்னும் பதம் உயர்திணையாண் பா லொருமைப் படர்க்கைப்பெயர்.

அழகுடையவன் என்பது குணப்பெயர்.

இருக்கிறுன் உயர்திணை யாண்பாலொருமைப் படர்க்கை நிகழ் காலத்தெரிநிலை வினைமுற்று.

இதில் முதற்பதம் ஒருபொருளைமாத்திரங் குறித்து நிகழுமொழியாகிய சாத்தனைக் குறித்து நின்றது. இரண்டாவது பதம் ஒரு குணப்பெயராகிய அழகுடையவனென்பதைக் குறித்துநின்றது. ஆகையால் இவைகளொவ்வொன்றும் தனிப்பதமென்றழைக்கப்பெறும்.

தனியுறுப்பு அனேக பெயர்ச் சொற்களையும் உரிச்சொற்களையும் இடைச்சொற்களையும் சார்ந்து நிற்கவுங்கூடும்.

(2) உ-ம். தொல்காப்பியரென்னும் இலக்கணி அகத்தியமுனிவரின் மாணுக்கராகவிருக்கிறுர்.

இந்த மேற்கோள் இரண்டு உறுப்புகளையுடையதாயு மொவ்வொரு உறுப்பும் இரண்டு பெயர்ச்சொற்களையுடையதாகவுமிருக்கின்றது.

தொல்காப்பியரென்னும் இலக்கணி முதலுறுப்பு. அகத்திய முனிவரின் மாணுக்கர் இரண்டாமுறுப்பு.

(3) உ-ம். இந்தியாவின் தென்பாகத்திலுள்ள கன்னிமாகுமரிமுனை திருவாங்கூரிராச்சியத்தைச் சேர்ந்ததாயிருக்கின்றது.

இந்தியாவின் தென்பாகத்திலுள்ள கன்னிமாகுமரி முனை யென்பதுவரை மேற்கோளின் ஓரங்கமாகவும், திருவாங்கூரிராச்சியத்தைச் சேர்ந்தது என்பதுவரை மற்றோரங்கமாகவு நிற்கு மாற்றை உய்த்துணர்ந்துகொள்க.

இதனால் ஓர் தருக்காங்கம் பல வார்த்தைகளை யுடையதாய் நடைபெறலாமென்பது பெற்றும்.

ஒரு பொருளையாவது ஒருதிரட்பொருளையாவது குறித்து நிகழும் பதமெல்லாம் ஒரு தருக்காங்கமாகக்குறித்து நடைபெறற்பாலது.

(20) ஒரு அங்கம் ஒருபதார்த்தத்தைக்குறித்து நிசழினுநிகழும்.

(உ-ம்) காளிதாசன், கம்பன், தமிழ்ச்சங்கம், தாஜ்மஹால்.

இவ்வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளின் பேராயிருத்தலினால் தனிப்பதமெனப் பெயர்பெறும். ஏனெனில், காளிதாசனென்றபொழுது ரகுவம்சமுதலியன செய்த காளிதாசனொருவனையே குறித்து நிற்குந்தன்மையால் என்க. மற்றைய பதங்கட்குமவ்வாறே யொட்டியறிந்துகொள்க.

(21) இத்தனிப்பதங்களைவிட மிகவுபகாரமுள்ள பொதுப்பதங்களும் பலவுள.

குணத்தால் ஒற்றுமைவாய்ந்த பலபொருள்களுள் ஒவ்வொன்றிற்கு முரியபெயர் பொதுப்பதமாம்.

(உ-ம்) மரம், குதிரை, பரமாணுபோல்வன.

மரம்: இது தாஜ்மஹால் என்பதைப்போல் ஒரு பொருளைக் குறித்து நிகழாது எத்தனையோகோடி பொருள்களுள் ஒவ்வொன்றிற்கு முரியபெயராய் நிகழ்தலினால் பொதுப்பெயராமாறு கண்டுகொள்க.

(22) ஒருதொகுதிக்குரியபெயர் திரட்பெயர்.

(உ-ம்) பெற்றம், தோப்பு, கூட்டம் என்பனபோல்வன.

(23) திரட்பதம், பொதுப்பதம் இவைகளை யறிவதில் மயக்கம் உண்டாதல் கூடுமாதலினால் அவைகளை மிகக்கவனமாயறிந்துணர்ந்துகொள்க.

ஒரு திரட்பதத்தைச்சொல்வான் கருத்துவகையாற் பொதுப்பதமாய் மாற்றலுங்கூடும். எங்ஙனமெனில், கூட்டம் என்னுந் திரட்பதம் சந்தைக்கூட்டம் திருநாட்கூட்டம் மாகாணக்கூட்டம் என்று பலதிறப்பட்டு நிற்குங்கால் பொதுப்பதமாயினமை கண்டுணர்க.

(24) சராசரங்களி லடங்கிய யாதாமோரு போருளின்பேயர் குணிப்பதமாம்.

(உ-ம்) கண்ணாடி கற்பலகை மரவீடு இவைபோல்வன. இவற்றின் பன்மைகளும் அவ்வாறும்.

(25) குணிப்பதங்களின் தன்மைகளைக் குறித்துறும் பேயர்கள் குணப்பதமாம்.

(உ-ம்) வெண்மை, செம்மை, திரிகோணத்துவம் போல்வன. இவைகளில் ஒவ்வொன்றும் தான் தங்கிநிற்றற்குரிய பதார்த்தத்தினின்றும் வேறுபடுவது போற்றோன்றிய சிலகுணத்தைக் குறித்துக்காட்டும் பெயர். இவற்றிற்கெல்லாம் பன்மைவருவதின்று. உரிச்சோற்களியாவும் சாதாரணமாய்க் குணிப்பதங்களேயாம்.

(இன்னும் வரும்.)

S. பால்வண்ண முதலியார்,
திருநேல்வேலி.

பரிமேலழகருரையும் திருக்குறளும்.

தமிழின் கண்ணுள்ள நூல்களுட் சிறந்தது திருக்குறளென்பதும் அந்நூற்குள்ள* பதின்மருரையுள் பரிமேலழகருரை ஒப்புயர்வற்றதென்பதும் தமிழ்வல்லோரால் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம்.

"பாலெல்லா நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்த உரையெல்லாம் பரிமே லழகன்
தெரித்த உரை யாமோ தெளி."

ஆன்றோராற் செய்யப்பட்ட இப்பாடலும் மேற்கூறியவற்றை விளக்கும். இஃதிவ்வாறாக, சின்னாளாகத் தமிழாராய்ச்சி செயப்புகுந்த சில ஆங்கிலரும் தமிழரும் பரிமேலழகருரையி லாங்காங்குக் குற்றங்கூறத்தலைப்பட்டனர். அவர்தம் கூற்றினுண்மை எவ்வளவிற்றென ஆராயப்புகுந்த தமிழ்ப்புலவருட் சிலர் பரிமேலழகருரை சில குறளுக்குப் பொருத்தமுடையனவல்லவென்று எடுத்துக்காட்டியுள்ளார். அவற்றுள் ஒன்று,

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு."

நிலையாமை என்னும் அதிகாரத்தில் உடற்கும் உயிர்க்குமுளதாகிய இயைபு இவ்வாறெனத் தெரிக்கும் இக்குறட்குப் பரிமேலழகியாருரை ஒருசிறிதும் பொருந்தாதெனவும், இக்குறளிலுள்ள குடம்பை என்னும் சொல்லுக்கு முட்டையெனப் பொருள்கூறுவதற்குத் தக்க ஆன்றோராட்சியில்லை யென்றும், திருவள்ளுவனார்தம் கருத்துக்கியைந்த உரை எழுதப்படவில்லையென்றும், எடுத்தெழுதியுள்ளார்.† "முன்தனியாத முட்டை தனித்துக் கிடப்ப இதனுள்ளிருந்த புள்

---

* தருமர் மணக்குடையர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பரிதி - திருமலையர்
மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லையுரை செய்தா ரிவர்.

† ஞானசாகரம் பதுமம். க. இதழ் கக.

ளுப்பருவம் வந்துழிப்பறந்துபோன தன்மைத்து உடம்பிற்கும் உயிர்க்குமுளதாய நட்பு" இதுபரிமேலழகியருரை. 'பழம் நுகர்ந்து கோடுகளில் இனிது வைகியும், கவலையின்றித் தாம் வேண்டுமிடந் திரிந்தும் பொழுது கழியாநிற்கும் புள் தான் முட்டையிட்டுக்குஞ்சு பொரிக்கும் பருவம் வந்த துணையானே தான் ஒதுங்குதற்குக் கூடு முடைந்து முட்டையிட்டு அடைகிடந்து குஞ்சுபொரித்து அவற்றை வளர்த்துப் போக்கித் தானும் அக்கூட்டை விட்டுப்போமாறுபோல உயிரானது தானிருவினைப் பயனை நுகருதற்கு வேண்டிய ஒருடலிற் புக்கு முன்னைய வினைப்பயனை நுகர்ந்து அவ்வுடலைவிட்டு நீங்கும். என்பது வள்ளுவனார் குறட்குச் செம்பொருளாக் கொள்ளலாம். பரிமேலழகர் குடம்பை என்பதற்கு ஈண்டுமுட்டையெனப் பொருள் கொண்டு அக்குறட்குப் பொருள்விரித்தல் பொருந்தாதென்பதற்குத் தக்ககாரணம், 'தனித்தொழிய' 'பறந்தற்றே' என்பனவற்றின் பொருளைப் பல்லாற்றானும் உற்றுநோக்குழி எளிதிற் புலப்படும்.

பரிமேலழகர் பிழைபடப் பொருளுரைத்தார் என்னுங்கொள்கை வெளிப்படவே சென்ற ஆவணி மாதத்திய செந்தமிழ்ப் பத்திரிகையில், "பரிமேலழகருரை" என மகுடமிட்டு எழுதியதோர் விஷயத்தினிறுதியில், யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் மகா-௱-௱-ஸ்ரீ அ. குமாரசுவாமிப் பிள்ளையவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார்;— கடவுள் வாழ்த்திலே 'அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்-பிறவாழி நீந்த லரிது' என்னுங்குறளிலே 'அறவாழி' என்பதற்கு 'அறக்கடல்' எனவும், 'பிறவாழி, என்பதற்கு 'அதனிற் பிறவாகிய கடல்' எனவும் உரைகூறி 'ஏனைப் பொருளு மின்பமும் பிறவெனப்பட்டன' என விசேடமுங் கூறினர். 'பிறவாழி' என்பதற்குப் பிறவிக்கடல் என உரைத்தலே பொருத்தம் என ஒருவருரைக்கின்றனர். பிறவு+ஆழி = பிறவாழி. பிறவு - பிறப்பு. 'பிற' என்னும் முதனிலை 'வு' என்னும் விகுதியோடு நின்று பிறப்பென்னும் பொருட்டாயிற்றென்பர். திருவாசகத்திலே சிறவு$ என்பது சிறப்பு என்னும் பொருளில் வருதலையுங் காட்டுவர். பிறவு

$ சிறவே செய்து வழிவந்து சிவனே நின்றாள் சேர்ந்தனரே. திருச்சதகம் வரி ௩௪௪.

என்பது பிறப்பென்னும் பொருளில் வருதற்கு மேற்கோள்கள் அரியனவல்ல. பாரதத்திலே, "கார்படைத்த நிறத்தோனைக் கைதொழுவார் பிறவாழிக் கரைகண்டாரே" என்றார். இங்கே 'பிறவாழி' என்றது பிறவிக்கடலேயாம். சம்பந்த சுவாமிகளுடைய தேவாரத்திலும் வருகின்றது.

தேவாரம்.

மருந்தவன் வானவர் தானவர்க்கும்
பெருந்தகை பிறவினோடிறவு மானான்
அருந்தவ முனிவரொ டாலிழற்கீழ்
இருந்தவன் வளநக ரிடைமருதே.

இங்கே (குறளில்) 'பிறவாழி' என்பதற்குப் 'பிறவிக்கடல்' என்றுரை கூறுதல் பொருந்துமா என்பது ஆராயத்தக்கதேயாம்."

இது ஆராயத்தகுந்த விஷயங்களு ளொன்றே அன்றே என்று பார்ப்புழி, இதில் ஆராய்ச்சிசெய்வதற்கிடனில்லை என்பது முதலதிகாரத்தை மாத்திரம் பார்த்தோர்க்கும் எளிதில் விளங்கும். இவ்வதிகாரத்து எட்டாவது குறள்,

"அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது."

பத்தாவது குறள்,

பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்,

பிறப்பு காரண காரியத்தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின், பிறவியைப் பெருங்கடலாக வுருவகஞ்செய்துள்ளார் தெய்வப்புலவர். பிறவாழி என்னுந்தொடர்க்குப் பிறப்பாகியகடல் எனவும் பொருள் கொள்ளுதல் இயையுமேனும், இவ்விடத்தில் அவ்வாறு பொருள் கூறுவது பொருந்தாதென்பது இருகுறளையும் உற்றுநோக்கின் எளிதிற் றெரியவரும். திருவள்ளுவர் முன்னர்க்கூறியதையே பின்னருங்கூறுரென்பதறிந்த பரிமேலழகர், முன்பின் பார்த்து முன்னர்க்கூறிய குறட்குத் தக்கபொருளுரைத்தாரென்று கோட

லேதகும். பரிமேலழகர் பிழைத்தனர் என்று கூறுவோர் கூற்று சிறிதேனும் கொள்ளத்தக்கதன்று.

'நீத்தார் பெருமை' என்னுமதிகாரத்தில்,

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்."

என்னுங் குறட்கெழுதிய குறிப்புரையில், "செயற்கெளிய லாவன மனம் வேண்டிய வாறே அதனைப் பொறிவழிகளால் புலன் களிற் செலுத்தலும், வெஃகலும், வெகுடலும் முதலாயின' எனப் பரிமேலழகர் கூறியுள்ளார். சிறியார் காரியம் இவையெனவே, ஐம்பு லனைவெல்லுதலும், வெஃகாமையும், வெகுளாமையும், பெரியர் அல்லது நீத்தார்தம் செய்கையாம். ஐம்புலன்களை வென்றவர் முற்றத் துறந்த முனிவரேயன்றி முதனிலையிலிருப்போனும், இல்வாழ்வா னும், மூன்றுநிலையிலுள்ளானும் ஐம்புலன்களை வென்றவராகார். இது பரிமேலழகர்க்கும் உடன்பாடாம்.* மூன்றுநிலையி லுள்ளோனே 'ஐம்புலனைவிட்டவனுகான், விடமுயல்வோன்' எனப்பட்டபோது, இரண்டாநிலையிலுள்ள இல்வாழ்வான் ஐம்புலன்களை விட்டவனுகா னென்பது திண்ணம். ஆகவே,

"†இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சியவர்."

என்னும் இக்குறளிலுள்ள புலம் வென்ற புன்மையில் காட்சி யவர், முற்றத் துறந்தோரைக் குறித்து நிற்கின்றதெனத் தெரி யவருகிறது. துறந்தோர் குணத்தைக் கூறும் இக்குறளும், இஃ தடங்கியுள்ள, 'பெரியர்' அல்லது 'நீத்தார்' செய்கை யாகிய 'வெஃகாமை' என்னும் அதிகாரமும் துறவறத்திற்கே சிறப்பாயி னமையின், அது துறவறவியலுள் சேர்த்துக் கூறப்படாது, இல்

---

* இயல்பினு னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை-(சஎ).

முயல்வாரு ளெல்லாந்தலை - புலன்களைவிட முயல்வாரெல்லாருள்ளும் மிக்கவன். முற்றத்துறந்தவர் விட்டமையின், முயல்வாரென்றது மூன்று நிலையினின்றாை (வானப்பிரஸ்தர்).

† வெஃகாமை: ச.

லற வியலுட் சேர்த்துக் * கூறப்பட்டதற்கு யாது காரணமோ? திருவள்ளுவர் குறள் வெளித்தோன்றி சுமார் 1800 வருஷங்களாகின்றன.† இவ்வதிகாரப் புரட்டு ஏற்பட்டதின்னகாலமென்பது தெரியவில்லை. உரையாசிரியரும் மூலநூல் தங்கைக்கெட்டியவாறே உரையியற்றமுயன்று அதிகார முறைமையும் விளக்கினர். 'வெஃகாமை' யின் அதிகார முறைமை இயற்கையான பொருத்தமன்று என்பதும் உரையாசிரியர் வலிந்து பொருத்தியுள்ளார் என்பதும் தெரியவருகிறது. பரிமேலழகர்க்கு முந்திய உரையாசிரியர் ஒன்பதின்மருள் ஒருவராய மணக்குடையார் ‡ உரைப் பிரதியிலும் வெஃகாமை என்னுமதிகாரம் இல்லறவியலிலுள்ளே காணப்படுகின்றது. ஆயினும், அவ்வதிகாரத்துள்ள பத்துக்குறளும் இவ்விரண்டினும் ஒருவரிசை யாகவில்லை. ‡ வெஃகாமை யென்னுமதிகாரத்தில் மணக்குடையார் உரைப் பிரதியில் வெஃகாமை என்னுமதிகாரத்து முதற்குறளாயுள்ளது:—

"வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்"

இது, பரிமேலழகருரைப் பிரதியில் ஏழாவது குறளாயிருக்கின்றது; வேறோருரையாசிரியர் உரைப்பிரதியில் இக்குறள் எட்டாவது குறளாயுளது. பரிமேலழகர் உரைப்பிரதியில், முதலாயுள்ள,

"நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்"

இக்குறள் மணக்குடையா ருரைப்பிரதியில் ஏழாவதாயும், மற்றைப் பிரதியில் ஆறுவதாயுமுளது. அவ்வதிகாரத்திலுள்ள குறள்களின் வரிசைக்கிரமம் ஒரு பிரதியிலுள்ளவாறு மற்றோருரைப்பிரதியிலில்லை. அதிகாரக்கிரமங்களும் பிற்காலத்தில் மாறியிருக்கலாம்.

---

* இல்லறவியல் 18-ஆம் அதிகாரம். (வெஃகாமை)

† The age of the Naladiyar, the Kural and the Last Madura Tamil Sangam,

‡ The manuscript in the Madras Government Oriental Mss Library.

பண்டைக்காலத்திலேயே ஏடுபுரண்டிருத்தல்வேண்டும். முன் ஐந்து குறள் ஒரு பக்கமும் பின்னைந்து குறள் மற்றொரு பக்கமுமாயுள்ள ஏடு ஒன்று தன்னியற்கை இடத்தினின்றும் நீங்கி வேறோரிடத்து அமர்ந்திருக்கலாம். கள்ளாமை யென்னுமதிகாரமும் இல்லறவிய லுள் இருந்திருத்தல்வேண்டுமென்று தோற்றுகிறது.

கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

இல்வாழ்வானுடைய மறுமைப்பயன் * புத்தேளுலகு என்பத னால், துறந்தார்க்கு இது வேண்டாதாயிற்று. இக்குறளடங்கியுள்ள 'கள்ளாமை, என்னுமதிகாரம் இல்லறவியலுள் இருத்தல் சிறப் புடைத்து. இவ்வதிகாரமும் பிற்காலத்து வெஃகாமை யென்னுமதி காரத்தைப்போன்றே ஏட்டுப்புரட்டினால் துறவறவியலுட் சேர்ந்தி ருக்கலாம். மற்றையுரையாசிரியரைப் போன்றே பரிமேலழகரும் தன் கொள்கைக்கும் தன் கூற்றுக்கு முரணுயிருப்பதை யறியாது வெஃகாமை என்னும் அதிகாரத்தையும் கள்ளாமை என்னும் அதி காரத்தையும் புரண்டிருந்த விடத்திலேயே வைத்து முன்னொடுபின் மலைவுள்ளதென்பதனை யோராது, வலிந்து பொருத்திக்காட்டியிருத் தல் வியக்கத்தக்கதே!

வெஃகாமை என்னுமதிகாரத்திலுள்ள குறள்களெல்லாம் சிறப்பு வகையான் இல்லறத்தார்க்கும், கள்ளாமை என்னுமதிகாரத்துள்ள குறள்களனைத்தும் துறவறத்தார்க்கும் உரியனவெனக்காட்டி, யான் மேற்கூறியது இன்னின்ன காரணத்தால் பொருந்தாது என்று எடுத்துக்காட்டுவோர்க்கு யான் பன்முறையும் வந்தனமளிக்கக் கட மைப்பட்டிருக்கின்றேன்.

சென்னை,
27—11—03.

இங்ஙனம்,
கல்குளம்-குப்புசாமி முதலியார்.

---

* ௫௦-வது குறள் பரிமேலழகருரை.

டிய சம்பந்தவுணர்வு; அஃதின்மை அசம்பந்தமெனப்படும்: அஃது எதிரியிடைப் பிரசித்தமாயிருக்கக் கூறும் வாக்கியம் பிரசித்தாசம்பந்தமெனப்படும்.—இது நற்பக்கம். இவ்வாறில்லாத வாக்கியம் அப்பிரசித்தாசம்பந்தமாம். எதிரியால் உணரப்பட்ட விசேடண விசேடிய சம்பந்தப்பொருளையுடைய வாக்கியமென்றபடி.]

உதாரணம்;—(ஒருவனை நோக்கி) "நீ ஆண்மகன்" எனக்கூறுவதாம். இதனுட்கூறப்பட்ட நீயென்னும் முன்னிலைப்பொருள் விசேடியம்; ஆண்மகனுதல் விசேடணம். இவற்றின் சம்பந்தவுணர்வு எதிரி தான்ஆண்மகனெனவறிந்துள்ள அறிவு; அஃது அவனுக்கு முன்னமேநிகழ்ந்துள்ளதாதலாற் சம்பந்தம்பிரசித்தமாகியதேயன்றி அசம்பந்தம் பிரசித்தமாகவில்லை: ஆதலாலிஃது அப்பிரசித்தா சம்பந்தமாயிற்று. மற்றும் இவ்வாறே (யானைப்பாகனைநோக்கி) "உன் கையகத்துள்ளது தோட்டி." என்பதுபோல எதிரி சம்பந்தம் அறிந்துள்ளவற்றைக் கூறுவதெல்லாம் இப்பக்கப்போலியாம்.

இதனுல் எதிரியால் தம்சம்பந்தம் அறியப் பெற்றிலாது தனித்தனி தாம் அறியப்பட்டுள்ள விசேடண விசேடியங்களையுடையதாகப் பக்கவுறுப்புக் கூறவேண்டுமென்றதாயிற்று. இவ்வாறு கூறுவது "இம்மலை நெருப்புடைத்து" என்னும் நற்பக்கம். இதனுள் விசேடியம் மலை, விசேடணம் நெருப்புடைமை; இவை யிரண்டும் முறையே எதிரிக்கு நேரிலும் பாகசாலை முதலியவற்றிலும் தனித்தனி பிரசித்தம்: இவற்றின் சம்பந்தம் மலை நெருப்புடைத்தாதல். அஃது அவனுக்குப் பிரசித்தமில்லாதிருக்குங்கால், இம்மலை நெருப்புடைத்து என அவற்றின் சம்பந்தம் பிரசித்தமாகுமாறு கூறப்படுதல் காண்க.

இப்பக்கப்போலி விசேடண விசேடிய சம்பந்தவுணர்வாகிய வாக்கியப்பொருளுணர்ச்சியை உண்டாக்குமாயினும் அவ்வுணர்ச்சி நினைவாதலேயன்றி அநுபவமாகாமையால், மெய்யநுபவத்து ளொன்ருகிய அநுமிதியுணர்விற்குக் காரணமான அநுமானத்துக்கு உறுப்பாகாது பக்கப்போலியாயிற்று.

இதுகாறுங் கூறியவாற்றால் ஐயந்திரிவாக்காது அறியாமையை நீக்கி மெய்யநுபவத்தையுண்டாக்குமாறு பக்கஃறுப்புக் கூறவேண்டு மென்பது பெறப்பட்டது.

ஏதுப் போலி.

இனி ஏதுப்போலி அசித்தம், அநைகாந்திகம், விருத்தம் என மூன்றுவகைப்பட்டு, அவையொவ்வொன்றும் பலவகையாம். அவற்றுள் அசித்தம் நான்குவகைப்படும். இவற்றின் பெயரும் உதாரணமும் பின்வரும்வரையறையுட் காண்க.

அசித்த வேதுப் போலி வரை யறை.

எண்	பெயர்	உதாரணம்		குறிப்பு
		பக்கம்	ஏது	
க	உபயா சித்தம்	இது புலிவாழ் காடு	புலிக்கொம்புடைமையால்	பொதுக்கூற்று
உ	அந்நியதரா சித்தம்	நாய் தீண்டற்பால தன்று	தீட்டுடைய தாதலால்	அவைதிகனை நோக்கிய வைதிகன் கூற்று
௩	சித்தா சித்தம்	தனிவழிச்செல்வோன் பொருளிழப்பான்	ஆறலைக்கப் படுதலால்	பொதுக் கூற்று
ச	ஆச்சிரயா சித்தம்	எலி பறவை	இறகுடைய தாதலால்	ஷை

உபயாசித்தம்

க. அசித்தம் நான்கனுள் உபயாசித்தமாவது, உபயவாதிகளாலும் உள்ளதாகக் கொள்ளப்படாத பொருளை ஏதுவாகக் கூறு

வது. உதாரணம்:—"இது புலிவாழ்காடு; புலிக்கோம்புடைமையால்." என்பதாம். இக்கூற்றினுள் புலிக்கொம்புடைமை ஏதுப்பொருள்;—அது உபயவாதிகளாலும் உள்ளதாகக்கொள்ளப்பட்டிலதாதலால் இஃது உபயாசித்தமாயிற்று.

சித்தம்-உள்ளதாகக் கொள்ளப்பட்டது; அசித்தம்-அதனின் வேருயது:—உள்ளதாகக்கொள்ளப்படாதது. அது பொருளில்லாமையால் உள்ளதாகக் கொள்ளப்படாததும், பொருளிருந்தும் அறிந்து கொள்ளாமையால் உள்ளதாகக் கொள்ளப்படாததும் என இருவகைப்படும். அவற்றுள் முன்னையதற்கு உதாரணம்:—குதிரைக்கொம்பு, மலடிமைந்தன் முதலியன. பின்னையதற்கு உதாரணம் (நாஸ்திகருக்கு) ஆன்மா, பழவினை முதலியன.

அவற்றுள் இங்குக் காட்டிய உதாரணம் பொருளில்லாமையால் வந்த உபயாசித்தம். பொருளிருந்து அறிந்துகொள்ளாமையால் வந்த உபயாசித்தத்துக்கு உதாரணம் (ஒரு பிறவிக்குருடன் மற்றொரு பிறவிக்குருடனை நோக்கி) "இது இராப்பொழுது; நிலாத்தோன்றுகின்றமையால்." என்பதாம். மற்றும்இவ்வாறே "இக்கன்று வலியுடைத்தாகும்; கடாப்பால் குடிக்கின்றமையால்." என்பதும் (நாஸ்திகரிருவருள் ஒருவரையொருவர் நோக்கி) "நாம் சுகதுக்கங்களையடைவோம்; பழவினையுடையம் ஆதலால்." என்பதும் முதலியனவெல்லாம் இவ்வேதுப்போலியாம்.

இவ்வேதுக்கூற்றுப் பொருளில்லததாதலால் ஏதுப்பொருளுணர்வின் வாயிலாகவரும் அநுமிதியுணர்வையுண்டாக்காது ஏதுப்போலியாயிற்று.

இவ்வேதுப்போலி எதிரியை மருட்டக்கருதிய வாதி கூற்ருகப் பெரும்பாலும் மதவழக்கில் வரும்.

அந்நியதராசித்தம்.

உ. அந்நியதராசித்தமாவது, உபயவாதிகளில் ஒருவனல் உள்ளதாகக்கொள்ளப்பட்டு, மற்றொருவனல் உள்ளதாகக்கொள்ளப்படாத பொருளை ஏதுவாகக்கூறுவது. உதாரணம்.—(அவைதிகனை

நோக்கி) "நாய் தீண்டற்பாலதன்று; தீட்டுடையதாதலால்." என வைதிகன் கூறுவதாம். இதனுள் ஏதுப்பொருள் தீட்டுடைமை. அது வைதிகனுகிய வாதிக்கு ஸ்மிருதிமுதலிய நூல்களால் சாக்காடு, மகப்பேறு முதலியவற்றுள் உள்ளதாகக்கொள்ளப்பட்டு, அவைதிகனுகிய எதிரிக்கு ஒருவாற்றுனும் உள்ளதாகக் கொள்ளப்படாமையால், இஃது அந்நியதராசித்தமாயிற்று. அந்நியதரன் இருவரிலொருவன்; அஃது இங்கு உபயவாதிகளிலொருவனைக் குறிப்பாலுணர்த்திற்று. மற்றும் இவ்வாறே "புகைச்சுருட்டுநெருப்பு கொள்ளற்பாலதன்று; எச்சிலாதலால்" எனபதும், (குருடனை நோக்கி) "இம்மாணிக்கமணி விலையுயர்ந்தது; ஒளி சிறந்ததாதலால்." என்பதும்முதலியனவெல்லாம் இவ்வேதுப்போலியாம். இக்கூற்று, எதிரிக்கு ஏதுப்பொருளுணர்வின்மையால் அவ்வுணர்வின் வாயிலாகவரும் அநுமிதியுணர்வையுண்டாக்காது ஏதுப்போலியாயிற்று.

சித்தாசித்தம்.

ஈ. சித்தாசித்தமாவது, சந்தேகவிஷயமாயுள்ள பொருளை ஏதுவாகக்கூறுவது. உதாரணம்;—"தனிவழிச்செல்பவன் பொருளிழப்பான்; ஆறலைக்கப்படுதலால்." என்பதாம். இதனுட் கூறப்பட்ட ஏதுப்பொருள் ஆறலைக்கப்படுதல். (வழிப்பறி கொடுத்தல்) அது தனிவழிச்சென்ற சில இடங்களில் உள்ளதாகக்கொள்ளப்பட்டுச் சித்தமாயும், சில இடங்களில் உள்ளதாகக்கொள்ளப்படாமல் அசித்தமாயும் இருத்தலால் இது சித்தாசித்தமாயிற்று. மற்றும் இவ்வாறே "இவன் செல்வமடைவான்; ஆகூழுடைமையால்." என்பதும் சித்தாசித்தம். இதில் ஆகூழுடைமை (புண்ணியமுடைமை) ஏதுப்பொருள். அஃது, ஒருவனுக்குச் செல்வமுண்டாதற்கு முன்னமே அவனுக்கு உண்டென்றாயினும் இல்லையென்றாயினும் அறிந்துகொள்ளப்படாமையால் சந்தேகவிஷயமாதல்பற்றிச் சித்தா

சித்தமாயிற்று. மற்றும் இவ்வாறு வருவனவெல்லாம் இவ்வேதுப் போலி யெனவறிக.

இதனுட் கூறப்படும் ஏதுப்பொருள் சந்தேகவிஷயமாதலால், அதனாற்றுணியுந்துணிபொருளுணர்வும் சந்தேகமாவதுபற்றி இஃது ஏதுப்போலியாயிற்று.

ஆச்சிரயாசித்தம்.

ச. ஆச்சிரயாசித்தமாவது, தன்மியின்கண் உள்ளதாகக்கொள்ளப்படாத பொருளை ஏதுவாகக்கூறுவது. உதாரணம். "எலி பறக்குமியல்புடையது; இறகுடைமையால்." என்பதாம். இதனுள் தன்மி-எலி; அதன்கணுள்ளதாகக் கொள்ளப்படாதது இறகுடைமை: அதனை ஏதுவாகக் கூறுதலாலிஃது ஆச்சிரயாசித்தமாயிற்று. ஆச்சிரயம் பற்று; அஃது இங்குத்தொடர்புடைமையாகியதன்மையை உணர்த்திநின்றது. மற்றும் இவ்வாறே "குதிரை கவைக்குளம்புடையது; கொம்புடைமையால்; எருது போல." என்றற்றொடக்கத்தனவெல்லாம் இவ்வேதுப்போலியாம்.

இதனுட் கூறப்படும் தன்மி சாத்திய ஏதுப் பொருள்கள் தனித்தனி வெளிப்பட்டுள்ளனவாயினும் தன்மியின்கண் ஏதுப்பொருள் உள்ளதாகக்கொள்ளப்படாமையால், தன்மியில் தன்றொடர்புணர்வுபற்றிவருந் துணிபொருளுணர்வைத் தோற்றுவிக்குமாற்றலின்றி ஏதுப்போலியாயிற்று.

இவை கூறியவாற்றால் உபயவாதிகளுக்கும் ஐயப்பாடின்றித் தன்மியின்கண்ணுள்ளதாகத் தெளியப்பட்டிருக்கும் பொருளை ஏதுவாகக்கூறவேண்டுமென்றதாயிற்று.

இனி அநைகாந்திகம் ஆறுவகைப்படும். அவற்றின் பெயரும் உதாரணமும் பின்வரும் வரையறையுட் காண்க.

அனைகாந்திகவேதுப்போலி வரையறை.

எண்	பெயர்	உதாரணம்		குறிப்பு
		பக்கம்	ஏது	
க	சாதாரணம்	இம்மலை நெருப்புடைத்து	அறியப்படுதலால்	பொதுக்கூற்று
உ	அசாதாரணம்	ஆனினம் தூய தோலுடையது	அலைதாடியுடைமையால்	வைதிகனை நோக்கிய வைதிகன் கூற்று
ங	சபக்கைகதேசவிருத்திவிபக்கவியாபி	இம்மலை நெருப்புடைத்து	புகையில்லாமையால்	பொதுக்கூற்று
ச	விபக்கைகதேசவிருத்திசபக்கவியாபி	இம்மலை புகையுடைத்து	நெருப்புடைமையால்	ஷை
ரு	உபயைகதேசவிருத்தி	காக்கை பறவை	கருநிறமுடைமையால்	ஷை
சு	விருத்தவியபிசாரி	வெளவால் முட்டையிற் பிறப்பது	பறவையாதலால்	ஷை

சாதாரணம்.

க. இவற்றுட் சாதாரணமாவது-சபக்கவிபக்கங்களிரண்டினும் பொதுவாய் நிறைந்துள்ள பொருளை ஏதுவாகக்கூறுவது. உதாரணம்:—“இம்மலை நெருப்புடைத்து; அறியப்படுதலால்” என்பதாம். இதனுள் அறியப்படுதல் ஏதுப்பொருள்: அது, நெருப்புடையதாகிச் சபக்கமாயுள்ள பாகசாலை முதலியவற்றுள்ளும், நெருப்பின்றி விபக்கமாகிய ஆற்றுவெள்ளமுதலியவற்றுள்ளும் நிறைந்திருத்தலால், இரண்டுபக்கங்களுக்கும் பொதுவாதல்பற்றி இது சாதாரணமாயிற்று. சாதாரணம்-பொது. மற்றும் இவ்வாறே மரம்

அறிவுடையது; பெயருடைமையால்", "ஊன் உண்ணத்தகும்; பொருளாதலால்." என்றற் றொடக்கத்தன வெல்லாம் இவ்வேதுப் போலியாம்.

இதன் ஏதுப்பொருள் சபக்கத்தில் நின்று துணிபொருளுணர்வையும், விபக்கத்தில் நின்று அதன்மறுதலைப்பொருளுணர்வையும் உடனிகழச்செய்து ஐயப்பாட்டை யுண்டாக்கலால் இஃது ஏதுப் போலியாயிற்று.

அசாதாரணம்.

உ. அசாதாரணமாவது சபக்கவிபக்கங்களில் ஓரிடத்து மின்றிப் பக்கத்தில் மாத்திரமிருக்கும் பொருளை ஏதுவாகக்கூறுவது. உதாரணம்:—"ஆனினம் தூயதோலுடையது; அலைதாடியுடைமையால்" என்பதாம் (இதுவைதிகர்கூற்று) இதனுள் அலைதாடியுடைமை ஏதுப்பொருள்; அது, தூயதோலுடைய மான் முதலிய சபக்கத்திலும், தூயதோலில்லாத கழுதை முதலிய விபக்கத்திலும் இல்லதாகி ஆனினமாகிய பக்கத்தில்மாத்திரம் சிறப்பாயிருத்தலால் இஃது அசாதாரணமாயிற்று. அசாதாரணம்-சிறப்பு. மற்றும் இவ்வாறே "நாக்கு ஓசையறியும்; சுவையறிகருவியாதலால்" என்பதும், "எல்லாப்பொருளும் அறியப்படுவன; பெயருடையனவாதலால்." என்பதும் போல்வன வெல்லாம் இவ்வேதுப்போலியாம்.

இவ்வேதுப்பொருளுக்குச் சபக்கத்தில் வியாத்தியின்மையால் துணிபொருளுண்மை தெளியப்படாமலும், விபக்கத்தில் வியாத்தியின்மையால் துணிபொருளின்மை தெளியப்படாமலும் ஐயத்துக் கேதுவாதலால் இஃது ஏதுப்போலியாயிற்று.

சபக்கைகதேசவிருத்தி விபக்கவியாபி.

ஙு. சபக்கைகதேசவிருத்தி விபக்கவியாபியாவது சபக்கத்தின் ஏகதேசத்திலுள்ளதாகி விபக்கத்தில் வியாபித்திருக்கும் பொருளை ஏதுவாகக்கூறுவது. உதாரணம்.—"இம்மலை நெருப்புடைத்து; புகையின்மையால்." என்பதாம். இதனுள் ஏதுப்பொருள் - புகையின்மை. சபக்கப்பொருள் - பாகசாலை, சூளை, பழுக்கக்காய்ச்சிய

இரும்பு, நெய்விளக்கு, தீப்பொறி முதலிய நெருப்புள்ளனவெல்லாம். விபக்கப்பொருள்-ஆற்றுவெள்ளம், பனிக்கட்டி, ஆறின சாம்பல் முதலிய நெருப்பில்லனவெல்லாம். இவற்றுள் ஏதுப்பொருளாகிய புகையின்மை சபக்கத்தில் பாகசாலை, சூளை, முதலிய ஏகதேசத்தை யொழித்து, ஒழிந்த ஏகதெசமாகிய சிவக்கக்காய்ச்சிய இரும்பு, நெய்விளக்கு, தீப்பொறி, முதலியவற்றுள் உள்ளதாய், நெருப்பில்லாது விபக்கமாகிய ஆற்றுவெள்ளம், பனிக்கட்டி முதலியவற்றுளெல்லாம் வியாபித்திருத்தலால் இது சபக்கைகதேசவிருத்தி விபக்கவியாபியாயிற்று.

ஏகதேசம்-சிறுபான்மை. அஃது இங்கு முற்றுப்பொருளின் மறுதலையாகிய குறைப்பொருளுணர்த்திநின்றது. இதனால் ஏகதேசமென்பதற்கு முற்றுப்பொருளாகாத சிறுபான்மை, செம்பாதி, பெரும்பான்மைகளாகிய குறைப்பொருளெல்லாம் பொருளாகக்கொள்க. விருத்தி-இருப்பது. வியாபி-முற்றுமிருப்பது. மற்றும் இவ்வாறே “குதிரைமிருகம்: கோம்பில்லாமையால்” என்றற்றொடக்கத்தனவும் இவ்வேதுப்போலியாமென வறிக.

விபக்கைக தேசவிருத்தி சபக்கவியாபி.

ச. விபக்கைக தேசவிருத்தி சபக்கவியாபியாவது, விபக்கத்துள் ஏகதேசத்துள்ளதாகிச் சபக்கங்களில் வியாபித்திருக்கும் பொருளை ஏதுவாகக் கூறுவது. உதாரணம்:—“மலை புகையுடைத்து; நெருப்புடைமையால்.” என்பதாம். இதனுள் நெருப்புடைமை ஏதுப்பொருள். அது புகையில்லாது விபக்கமாகிய பொருள்களில் ஏகதேசமாகியசிவக்கக்காய்ச்சிய இரும்பு தீப்பொறிமுதலியவற்றுள் உள்ளதாய், புகையுடையதாகிச் சபக்கமாகிய பாகசாலை, சூளை முதலியவற்றிலெல்லாம் வியாபித்து நிற்றலால் இது விபக்கைகதேசவிருத்தி சபக்கவியாபியாயிற்று. மற்றுமிவ்வாறே “இப்பறவை காக்கை; கருநிறமுடைமையால்,” “இவன் சமணன்; திருநீறணியாமையால்” என்றற்றொடக்கத்தனவெல்லாம் இவ்வேதுப்போலியாமென வறிக.

மல எருவைத் தக்கபடி சேகரித்து உபயோகப்படுத்தாமல், ஏரி, குளம், குட்டை, இட்டேரி, சாலைப்புறங்களிற் கழித்து, பார்ப்பவர்களுக்கும், நடப்பவர்களுக்கும் அசங்கியத்தையும் அசுத்தத்தையும் உண்டாக்கி வருகிறார்கள். சில குடியானவர்கள் தம் நிலங்களிலிருக்கும் ஆடுமாடுகளின் எருவையாவது தக்கபடி சேகரித்துப்பாதுகாவாமல் எருமுட்டைகளாக மாற்றி விலைக்கு விற்றும் தாமும் அடுப்பெரித்தும் அழித்துவிடுகிறார்கள். சில சோம்பேறிக் குடிகள் தம் நிலங்களில் தங்கும் ஆடுமாடுகளின் எருவை அப்போதைக்கப்போது வெயிலும் காற்றும்படாத பள்ளங்கள் அல்லது எருக்குழிகளில் போட்டுக் காப்பாற்றாமல், போட்டவிடத்தில் இருக்கவிட்டு அவைகளை வெயிலாலுலர்ந்து காய்ந்து கெட்டுப்போகச் செய்துவிடுகிறார்கள். சிலர், தம் நிலத்திற்கு இன்றியமையா எலும்பு, பிண்ணாக்கு முதலான பெருமைபெற்ற எருக்களையெல்லாம் வேறு நாட்டாருக்கு விற்று ஏற்றுமதி செய்துவிட்டு ஏமாந்து தயங்குகிறார்கள். இப்படிக் குடியானவர்களுடைய தரித்திரத்தினாலும், சோம்பலினாலும், அஜாக்கிரதையினாலும், அவிவேகத்தினாலும் நமது நாட்டின் நிலத்துக்குத் தக்க எருவில்லாமல் பூமிகளுடைய பெருமைகள் பாழ்த்தும், பெரும் பஞ்சங்கள் சம்பவித்தும் கணக்கற்ற குடிகள் கைலாசஞ் சேருகிறார்கள்.

ஆட்டுமந்தை மாட்டுப்பட்டிகளை நிலத்தில் எருவுக்காக நிற்கவிடும் காலத்தில் சில சோம்பேறிக் குடியானவர்கள், எருக்காக்கும் பூமியை முன்னாடியாக இரண்டொருதரம் உழுது அதில் விழும் கால்நடைகளின் சாணம் நீர் முதலானவைகள் பூமியில் சுவறும்படி செய்தும், அந்த எருகாத்த இடத்தைவிட்டு மந்தையை அப்புறப்படுத்தும்போதும், அந்த எருபோட்ட நிலத்தை உடனேஉழுது அல்லது மேல்மண்ணைப்போட்டு மூடாமலும் விடுவதனால்; பூமியில் விழுந்த சாணம் நீர் முதலான சத்துக்கள் சூரியவெப்பத்தினாலும், காற்றினாலும் காய்ந்தும், பட்டபாடும் பணமும் வீணாக்கிவிடுகிறார்கள். புத்திசாலிகளான சில குடிகளோவெனில் தம் நிலங்களில் ஆட்டு மந்தைகளை அடைக்கும் முன்னமே பூமியை உழுதும், மந்தையைக்கிடைத்தியும், அப்புறப்படுத்தும்போதும் உழுது அல்லது மண்ணைப்போட்டும் எருவை மூடிவிடுகிறபடியால், அதன் காரசத்துக்கள் அதிகம்

எழுந்துபோகாமல் நிலத்துக்கு வளந்தருகின்றன. இவ்விரண்டுவித உபாயங்களை நமது குடியானவர்கள் ஆரத்தீர ஆலோசித்துவந்தால் தங்களுக்கு வலியக்கிடைக்கும் தங்கமானஎருவின் சத்தைக்கெடுத்து தம் பூமிகளைப் பாழ்த்துப்போகச் செய்யார்கள்.

இம்மட்டோ! சில குடியானவர்கள் தமது கால்நடைகளின் சாணத்தை எருமுட்டைகளாகத் தட்டி அடுப்பில்போட்டு அழித்து விடுகிறார்கள். இதற்குக் காரணம் விறகில்லாக் கஷ்டமென்கிறார்கள். ஒரு ஜதை மாட்டின் சாணத்தை ஒருவருஷமெல்லாஞ்சேர்த்து முட்டை தட்டினால் 3000-முட்டைகளாகும். இதன்விலைசுமார் 6ரூபாய். ஆனால் இந்த ஒரு ஜதை மாட்டின் ஒருவருஷ சாணத்தை எருவாக்கினால் சுமார் 15-ரூபாய் கிடைக்கும். இதனால் லாப நஷ்டமின்னதென்று தெரிந்துகொள்ளலாம். விறகு இல்லை என்று வீண்சாக்குப் போக்குச் சொல்லுகிறவர்கள், தம் நிலங்களின் நாலாபக்கத்திலும் கிளுவை, கொடுக்காப்புளிச்செடிகளை வைத்துப்பயிரிட்டால் நல்ல வேலியுமாகும் விறகுமாகுமே.

தமக்கும், தம் கால்நடைகளுக்கும் உபயோகப்படாமல் தோட்டத்தில்சேரும் தாள்கள், வேர்கள், தண்டுகள், இலைகளும், களத்தில் வீணாகப்போகும் சக்கை ரெட்டு, முளங்கி, பதர், உமி முதலானதுகளையும், தக்கபடி உபயோகப்படுத்தினால் எவ்வளவோ நல்ல எருவாகும்.

நாடுநகரங்களில் கூட்டிச்சேர்க்கும் குப்பைகளைச் சிறிதுகாலம் ஓரிடத்தில் குவியலாகக் கொட்டிவைத்திருந்தால், அவைகள் அவியத்தொடங்கி உஷ்ணமதிகரிக்க, அதிலுற்பத்தியாகும் (Ammonia) அமோனியா என்னும் அமிலப்பொருளின் வாசனையையும், அது ஆகாயத்தில் ஆவியாய்ப் பறந்துபோவதும் தெரியவரும். அந்த அமோனியாவென்னும் அமிலம்தான் சுரேகாரம்—நைட்டிரிஜன் என்னும் பதார்த்தத்தையுடைய சத்து. பிறகு அந்தக் குப்பையைக் கிளறிப்பார்த்தால்உள்ளேவறண்டு வெண்காட்சியாகவிருக்கும். அது அப்படி வறண்டு வெண்காட்சியாவதினால் அந்தக்குப்பையிலுள்ள அம்மோனியம் என்னும் விலையுயர்ந்த சத்துப் போய்விட்டதென்று திட்டமாகச் சொல்லலாம். ஆனதுபற்றியே, இந்நாட்டிலே சில புத்தி

மான்களான குடியானவர்கள் தத்தம் நிலங்களில் பெரிய குழிகளைத் தோண்டியும்; அதில் தமது ஆடுமாடுகளுடைய நீர், சாணம், குப்பை, குச்சிகளையெல்லாம் ஜாக்கிரதையாகச் சேர்த்துவைத்தும் அடிக்கடி தருணம்பார்த்துத் தண்ணீரைவிட்டு மக்கச்செய்தும், மேலே மூடிவைத்தும் அதிக உபயோகமான அமோனியா என்னும் அமில சத்தைப் பாதுகாத்து வருகிறார்கள்.

எருவைக் காப்பாற்றும் விதம்.

இப்படிச் செய்வதைப்பார்க்கிலும் ஒரு ஜதை மாடுகளுக்கு பத்து அடி நீளமும், 6 அடி அகலமுமாக ஒரு கூரைச் சாலையைக் கட்டி, அதில் மூன்றடி பள்ளந்தோண்டி அதில் கருங்கல்லையும் களிமண்ணையும் கலந்துபோட்டு திமிசுபண்ணி, ஈரம்இறங்காதபடி செய்தும், அதின்மேல் மூன்றங்குலம் சாம்பலைப்பரப்பியும், அதன்மேல் மாடுகளைக் கட்டாமல் விட்டும், அவைகள் நாடோறும் அங்குகழியும் சாண முதலானவற்றை அங்கேயே பரக்கத்தூவியும் அவற்றின்மேல் கால்நடைகள் கழித்துவிடும் புல், தட்டு, இலை முதலானவைகளை வாரிப்போட்டு மூடிவைத்தும், அதன்மேல் கால்நடைகளை மிதிக்கும்படிக்கும், படுக்கும்படிக்கும் செய்வித்துவந்தால்; அந்த எருக்குப்பை நன்றாக அழுத்தப்பட்டும், அதன் சத்துக்கள் அப்புறம்போகாமல் பாதுகாக்கப்பட்டும், மூன்றோ அல்லது ஆறுமாதங்களுக்கு ஒரு தரம் எடுத்தால் மாடு ஒன்றுக்கு 5-அல்லது 7-டன் அல்லது 20 வண்டி எரு அகப்படும். இது முதல்தரமான எரு என்பதற்குச் சந்தேகமில்லை.

இந்த எருவின் சத்து கீழ் இறங்காதபடி அடியில் கற்களையும் களிமண்ணையும்போட்டு திமிசுசெய்திருப்பதனாலும்; எருவின்சத்து மேற்போகாதபடி குப்பை இலை முதலானவைகளால் மூடிவைத்து மிதிபடும்படி வைப்பதாலும்; மழை வெய்யில் விழுந்து கெடுக்காதபடி மேற்கூரைகள் போட்டிருப்பதனாலும், இவ்விதமாக உண்டாக்கும் எருவில் அமோனியா என்னும் அமிலம் அப்புறம் போகாதிருப்பதாலும், இந்த எரு முதல்தரமான எரு என்று சொல்லலாம். இப்படிக்கன்றி மாட்டு எருவை நாடோறும் எடுத்துக்குழியில் குவித்து வைப்பதில் அதன் சத்துக்கள் ஆவியாகப் போகிறதல்லாமல்: ஒரு

மாட்டின் எருவை ஒரு வருஷம் முழுதும் சேர்த்தாலும் இரண்டு வண்டி எருவும் நல்லதாகக் கிடையாது.

இவ்விதமாகச் செய்வதற்கு நமது குடியானவர்கள் சொல்லும் ஆக்ஷேபணைகள் என்னவெனில், இம்மாதிரியாகக் கால்நடைகள் எருவின்மீது நின்று படுத்தால் அவைகளுக்கு ஈரம் தாக்கி நோய்பெற்று நாசமாகிவிடும் என்றும், கால்நடைகளுக்கு ஈரம் தாக்காதபடி இலை முதலானவற்றை எங்கிருந்து போடுகிறதென்றும் சொல்லுகிறார்கள். இவ்விரண்டு கேள்விகளில் இரண்டாவது கேள்விக்கு விடை சொல்வதே முதற் கேள்விக்குச் சமாதானமாகும். கால்நடைகள் எப்போதும் ஈரத்தில் நின்று படுத்தால் கெடுதலுண்டாகுந்தான்; ஆனால் ஈரம் முழுதும் அடியில் உறிஞ்சிக் கொள்ளும்படியாகத் தக்க தழை, குப்பை, சருகுகளைப் போட்டால், கால்நடைகளுக்குக் கெடுதியுண்டாகாது. இனிக் குப்பை, சருகுகள் எங்கிருக்கின்றனவென்றால், அந்தந்த நிலத்தில் விளையும் பயிர்பச்சைகளின் வேர்கள், காய்கறிச் செடிகளின் கட்டை, கொம்பு, கொடி, சுள்ளி முதலானவற்றையும்: இலை உதிர்காலத்தில் தானாக உதிரும் சருகுகளையும், சில நிலங்களில் சாதாரணமாக விளைந்திருக்கும் வேம்பு புன்கு வாதாநாராயணம்முதலான செடிகளின் காய்ந்த இலைகளையும் சோம்பல்விட்டுச் சேகரித்தால், எவ்வளவோ இலைக்குப்பை செத்தைகள் கிடைக்குமென்பது திண்ணம். இந்த உபாயத்தை சைதாப்பேட்டை சர்க்கார் விவசாயத்தோட்டத்திற் சென்ற முப்பது வருஷகாலமாகச் செய்து லாபமடைந்துவருகிறார்கள்.

வேறுவகை.

இப்படி எருவைப் பாதுகாக்கும் வகையை அனுசரிக்க இஷ்டமில்லாதவர்களுக்கு வேறு ஒருசுலபமான வகையைக் காட்டுகிறோம்.

சாதாரணமாக நமது நாட்டின் கால்நடைகளுக்குக் கட்டும்கொட்டத்தின் தரையை ஒரு பக்கத்திற் சற்றுச் சாய்ப்பாகவும் வாட்டமாகவும் இருக்கும்படி செய்தும், அதிற் கட்டும் கால்நடைகளின் மூத்திரமுதலானவை அப்போதைக்கப்போது வடிந்து விழும்படி சிறு சலதாரைகளைவைத்தும், அவைகளின் மூலமாகவரும் சாணம் மூத்திரம் முதலானவை வந்து தங்க ஷை கொட்டத்தின் சாய்ப்

பான கடையில் பானை அல்லது தொட்டியை வைத்தும்; அதற்குச் சமீபத்தில் வேண்டுமளவுக்குத்தக்க குழியைத்தோண்டியும்; அதின் அடிப்பாகத்தையும் சுற்றுப்பக்கங்களையும் களிமண்ணினால் மணியாசனமாகப்பூசிவைத்தும், அந்தக்குழியில்முன்சொன்ன தொட்டி அல்லது பானையிற்சேரும் சாணி மூத்திரம் முதலானவற்றை அன்று கொண்டுவந்துபோட்டும், அதன்மேற் குப்பை செத்தைகளைப்போட்டு மூடியும் மிதித்தும், அந்தக்குழியின்மேல் வெய்யில்மழை விழாதபடி பந்தலும் போட்டுவிட்டாற் குழியில் சேரும் எரு கூடியவரையில் நல்ல எருவாகும். இது வெகு சுலபமான வழி.

"எருச்செய்வது இனம் செய்யாது" என்னும் பழமொழியின் பொருளை நன்கறிந்த இந்நாட்டார் அது விஷயத்தில் சிரத்தை வைக்காமற்போகவே, பூமிகளின் செழிப்புக்குன்றிப் பயிர்கள் பாழ்த்து பஞ்சம் மேலிட்டு, கஞ்சிக்கு அவஸ்தைப்பட்டு, அஞ்சாதவர்களுக்கெல்லாம் அஞ்சலிசெய்து, நெஞ்சுபுண்ணாகி, கெஞ்சிக் கூத்தாடிக் கூலிக்காரராகிவிட்டார்கள். நம்மை ஆண்டுவரும் ஆங்கிலேயரும், மற்ற ஐரோப்பா அமெரிக்கா கண்டத்தாரும் தாம் வதிந்துவரும் ஐரோப்பா அமெரிக்கா தேசங்களின் நிலம் விவசாயத்துக்கு அவ்வளவாக ஏற்றதாகாமலிருந்தும், விவசாயத்தின் பெருமையைப்பற்றித் தக்கபடி புத்தியைச் செலுத்திப் பிரபலமாக உழைக்க ஆரம்பித்தார்கள். இப்படி ஆரம்பிக்கவே, சென்ற நூற்றாண்டில் இந்த விவசாயத்திற்கென்று இரசவாத பூதத்துவ சாஸ்திரங்களை எழுதியும், அவைகளை விவசாயத்தொழிலிற் புகும் தலைமக்கள் குலமக்களுக்குக் கற்பித்தும் குடித்தனமோங்கி வளர உழைத்துவருகிறார்கள்.

ஆகவே, விவசாய இரசாயன சாஸ்திரத்தில் எருவிடும் வகுப்பைப்பற்றிச் சொல்லியிருக்கும் விவரங்களை இதனடியிற் சங்கிரகமாகச் சொல்லுகிறோம்.

எருவின் வகை—The Classification of Manures.

நிலத்துக்கு இடும் எருவை சாதாரண எரு—General Manure என்றும், விசேஷ எரு—Special Manure என்றும், வியவசாயரசாயன சாஸ்திரிகள் வகுத்திருக்கிறார்கள்.

சாதாரண எருவகை—General Manure.

சாதாரண எரு எஃதென்றால், பயிர்வகைகளுடைய வளர்ச்சிக்கு இன்றியமையாத உப்பு, பாஸ்கரம் சாம்பற்சத்துக்களைக் கொஞ்சமாகக்கொண்டிருக்கும் கால்நடைகளின் சாணம், மூத்திரம் குப்பை செத்தை, அடுப்புச்சாம்பல், அடுப்புக்கரிப்பொடி, எலும்பு, மலமூத்திராதிகளே; இவைகளை தக்கபடிபாதுகாக்காமல் மூலைமுடுக்குகளில் கொட்டிவைத்தால் அவைகள் அழுகி மக்கி மனுஷருடைய சுகத்திற்குக் கெடுதியை விளைவிக்கும். இப்படிக் கெடுதியை விளைவிக்கும் சரக்குகளையே தக்கபடி குழிகளிற்போட்டு மூடிவைத்து எருவாகமாறியபிறகு பயிர்பச்சைகளுக்குப் போட்டால், நல்ல பலனையும், சுகத்தையும், சந்தோஷ வாழ்வையும் தரும்.

நிலத்தின் செழிப்புக்கு இன்றியமையாத சுரேகாரம் (நயிட்ரிஜன்) 9-முதல் 15-ராத்தலும், பிரகாசதாமிலம் (பாஸ்பாரிக்ஆஸிட்) 9-முதல் 15-ராத்தலும், பொட்டாஸ் சாம்பல் (மர உப்பு) 4-முதல் 4-பாரம் எரு குப்பையில் இருக்கின்றன. எவ்வளவு குறைவான சத்துக்கள் பூமியின் வளப்பத்துக்குப் போதாதாகையால், இவைகளை அதிகப்படுத்தவேண்டும். சாதாரண எரு குப்பையிலிருக்கும் கந்தமூலபாகம் முக்கியமானது. அது மக்கி அழுகிப்போவதினால் (இங்காலாமிலவணம்) கர்பானிக் ஆஸிட் பதார்த்தம் உண்டாகிறது. அது பாறைக்கற்களிலும், முக்கியமாக சுண்ணாம்புசத்து உள்ள கற்களிலும் மோதித்தாக்க அக்கற்களில் இயற்கையாக அமைந்திருக்கும் தாதுப்பொருள்களைப் பயிர்பச்சைகளுக்கு தந்து செழித்தோங்கச் செய்கின்றது.

விசேஷ எரு—Special Manure.

விசேஷ எரு எஃதென்றால்—முன்சொன்ன சாதாரண எருவில் வெடியுப்பு, நவாசாரம், எலும்பு, சிலாசத்து, காடிகாரம், சுண்ணாம்பைப்போன்ற யாதாவது ஒரு விசேஷ எருவேயாம்.

(சுரேகார) உப்புசத்துள்ள (நயிட்டிரஜன்) எருவகை எவையெனில், மாமிசபக்ஷணஞ் செய்யும் பிராணிகளின் மலமூத்திராதிகளே. இதில் மனுஷர்கள், பூமியில் உண்டாகும் எல்லா பதார்த்தங்களில்

முக்கியமான பழம், தானியம், மாமிசம் முதலியவற்றைச் சாப்பிடுவதினால்; இவர்களால் உண்டாகும் மலஜலம் எல்லாவற்றிலும் சிரேஷ்டம். இதை சாம்பல் அல்லது களிமண்ணிற் கலந்து உலரவைத்தால் துர்க்கந்தமற்ற புட்ரெட் சாம்பல் மலச்சூரணமாகும். புது எலும்புகள், இரத்தம், மாமிசம், மீன், வெடியுப்பு, பிண்ணாக்கு வகை, மிருகங்களின் கொம்புகள், நகங்கள், மயிர், சாணம், புரு, வௌவால், கோழி முதலான பக்ஷிகளின் புழுக்கை முதலானவை இந்நாட்டில் ஏராளமாக அகப்படும்படியானவைகளே. இவைகளில் எல்லாம் நயிட்டிரஜன் என்னும் அமிலம் (உப்புசத்து) விசேஷமாக இருக்கிறது.

எந்த எருவில் நயிட்டிரஜன் என்னும் அமிலம் அல்லது (சுரேகாரம் என்னும்) உப்பு சத்துக்கள் இருக்கின்றனவோ, அவைகள் பயிர்களைச் செழிப்பாக வளரவும், இலைகளை அழகாக அடர்ந்து படர்ந்து விகசிக்கவும் செய்யும். இப்படிச் சொல்வதனால், சுரேகாரம் உப்புசத்துக்கள் மாத்திரமே பயிர்களை வளரச்செய்யுமென்பதல்ல; பயிருக்குவேண்டிய இதர தாதுப்பொருள்களும் நிலத்தில் இருக்க வேண்டும்; ஆனால், க்ஷார சத்துக்கள் அதிகம் சேர்வதினால், மற்ற சத்துக்களுடைய உதவியாலாகும் பயிர்களைப்பார்க்கிலும் துரிதத்திலாகுமென்பதே; ஆகையால் நயிட்டிரஜன் என்னும் (சுரேகார) அமிலசத்து அதிகரித்திருக்கிற நிலத்தில் வெள்ளரி, கத்தரி, கர்பூஜ் முதலான காய்கறி வகைகளும், திராக்ஷ முதலான பழவர்க்கங்களும் விசேஷமாகச்செழித்து பலனைத்தரும். இந்த நயிட்டிரஜன் என்னும் (சுரேகார) உப்புசத்துள்ள எருவை மாமரம், கமலா, பலா முதலான மரங்கள் சிறிய செடிகளாக இருக்கும்போது உபயோகப்படுத்தலாமேயொழிய; பலந்தரும் பக்குவகாலத்தில் உபயோகித்தால், இலைகளை விரிவாகத்தழைக்கச் செய்வித்து, காய்கனிகளை சிறுகச்செய்துவிடும். இந்த உப்புசத்து சேர்ந்த எருவினால் விளைவிக்கும் பயிர்களுக்கு ஜலம் எதேஷ்டமாக விடவேண்டும். இல்லாவிட்டால் செடிகள் பட்டுப்போம்.

பாஸ்கரம் (பாஸ்பரிக் எரு பிரகாசதாமிலம்.)

Phosphorus.

இந்த பிரகாசதாமிலம் (பாஸ்பரிக்கு) சத்து சேர்த்த எரு தானியங்களையும், விதைகளையும், கொட்டைகளையும் கொழுக்க வளரும்படி செய்யும். இந்த உபயோகமான சத்து நல்லநிலத்தில் 100-க்கு அரை ராத்தல் மாத்திரமாகவும், சிறிதாகவும் கலந்திருக்கிறது. இது பிராணிகளுடைய எலும்புகளில் 100-க்கு 83 பாகம் சுண்ணும்புசத்தும், பாஸ்கர சத்தும் இருக்கிறது. ஐரோப்பா முதலான தேசங்களில் பிராணிகள் எலும்புகளிலிருக்கும் கொழுப்புநீங்க காய்ச்சி, பெரிய யந்திரங்களில் இடித்து பொடிப் பொடியாக்கி அதற்குத்தக்க அளவுக்குக் கந்தக திராவகத்தைசேர்த்தும், சம அளவு தண்ணீரில் ஊறவைத்தும், பிறகு ஜலரூபமாக (Superphosphate) அதிபிரகாசித லவணமாக உபயோகப்படுத்துகிறார்கள். இப்படி ஜலரூபமாகச்செய்வதற்குக்காரணம் இந்தசத்து இலகுவில் கரையாதிருப்பதே. இந்த முறையை இந்நாட்டார் அநுஷ்டிப்பது அசாத்தியம்; ஆகவே, எலும்புகளைசேர்த்துப்பொடியாக்கி, அப்பொடியை அழுகிப்போன குப்பை செத்தைகளோடு கலக்கி எருக்குழியில் ஆறுமாதம் போட்டுவைத்தால், உடனே கர்பானிக்ஆசிட் (இங்கலாமில்லவணம்) என்னும் சத்தின் உதவியாற் கலந்து நல்ல எருவாகிவிடும். இப்படிச் செய்வதில் அமோனியா என்னும் அமிலசத்து சிறிது நஷ்டமாகும், ஆயினும் நிலத்துக்கு உரமாக்கி அநுகூலம் செய்யாது விடாது. சில தேசங்களில் எலும்புகளைச்சேர்த்துக்குழிகளில் போட்டும், அவைகளின்மேற் கால்நடைகளின் மூத்திரத்தை வார்த்தும் ஊறவைத்து வருவதில், அவைகள்சீக்கிரத்தில் மக்கி எருவாக்கி உபயோகப்படுத்துகிறார்கள். இந்தத் தங்கமான எருவின் நன்மையை இந்நாட்டார் அறியாதிருப்பது ஆச்சரியம்!

இவ்விதமாய் இந்த திவ்ய எருவை நாம் உபயோகிக்காமல் வீணுக்க, ஆங்கிலேயர் தூரதேசத்திலிருந்து காப்பித்தோட்டங்களுக்காகத் தங்களுடைய சிப்பந்திகளின் மூலமாயும், வர்த்தகரின் மூலமாயும் விசேஷ விலையும், ரெயில் சார்ஜும் கொடுத்து வாங்கிக்கொண்டுபோய் போட்டுத் தனவான்களாகிறார்கள். பிரதி வருஷமும் நமது நாட்டிலிருந்து 3,000 டன் எலும்புகள், 17,000 டன் பிண்ணுக்கும் ஏற்றுமதியாகி வருகின்றன.

இ-ள். இருளுண்ணார், தசையுங் கள்ளுந் தேனும் விரும்பார், துறக்கம் பெறினும் அதுபொருட்டாகப் பொய்சொல்லார், கொலையுங் களவும் அறியார், மகளிர் மோகத்தாலே மனமசையார், *பஞ்சபரமேட்டிகளை வணங்குவார்; ஐம்புலன்மேல் விருப்பம் நீங்கிய பிண்டிவேந்தரடியாராகிய எங்கள் நாயகர்; எ-று.

இதனால், இந்த அறம்பத்தும் பிறர்பேணார் என்பதாம். மிசைதல் - புசித்தல். நறை - கள். இசையார்-உடன்படார். அசைவு-தளர்வு. 'ஐயரைப் பேணுவர்' என்றும் பாடம். (அரு)

நாயகத் தேவர்த § நன்முதற் றேவரை நாண்மலர்வான்
மீயகத் தேவர மேற்கொள்ளுந் தேவரை மெய்யடியார்
வாயகத் தேவரும் வண்புகழ்த் தேவரை மாற்றிநெஞ்சே
நீயகத் தேவரை யித்தனை நாளு நினைத்தனையே.

இ-ள். இந்திரர் மூவர்க்கும் முதலாய தேவரை, தாமரைப்பூ ஆகாயத்தின் மேலேவர அதன்மேல் எழுந்தருளுகின்ற தேவரை, அன்பர் நாவிலே தோற்றுகின்ற புகழையுடைய தேவரைக் கைவிட்டு, நெஞ்சமே! இத்தனை நாளும் யாவரை நினைத்தாய் சொல்லாய்; எ-று.

இதனால், மெய்யறிந்தானொருவன் நெஞ்சோடு உசாவியதாம். மீ-மேல். வாய் - ஆகுபெயராலே நாவாயிற்று. நீயகத்து ஏவரை - நீ உள்ளே யாவரை.

நினைத்தனை யாயினும் வாழ்த்தினை யாயினு நீயுநெஞ்சே
தினைத்துணை நல்லறஞ் செய்தனை யாயினுஞ் சேர்ந்தவரைப்
பினைத்தனை வந்தனை செய்யவொட் டாப்பிண்டி யாற்கரிதோ
வுனைத்தனை யேயொக்க வித்தனை நாளி லுயர்த்துகையே.

இ-ள். நெஞ்சே! பிறரை வணங்காமல் அருகத்தேவனையே தினையளவு நினைத்தனையாயினும், வாழ்த்தினையாயினும், நல்ல தருமத்தைச் செய்தனையாயினும் அது சாலும்; உலகிற் பகை, நொதுமல், நண்பு என்னாதே தன்னைச் சேர்ந்தவர் யாவரையும் பின்னைத் தன்னையும் வணங்கவொட்டாத பிண்டியானுக்குத் தன்னையொக்கச் சிறிதுநாளில் உயர்த்துகை அரிதன்று; எ-று.

---

* பஞ்சபரமேட்டிகள் இன்னார் என்பது, திருநூற்றந்தாதி சகூ-ம் செய்யுளானுணர்க.

§ நம்முதற் என்றும் பிரதிபேதம் உண்டு.

இதனல், 'பாவி! சிறிதும் அறஞ்செய்கின்றிலை' என நெஞ்சைக் கழறியதாம். அதுவே சாலும் என ஒருசொல் வருவிக்க. சேர்ந்தவர் யாவரையும் என்பதனுலே பகை, நொதுமல், நண்பு வருவித்தாம். இத்தனை என்றது குறிப்பாற் சிறிது நாள். (அரு)

கைத்துக் கடிதடுங் காஞ்சிரந் தின்பவன் றீங்கனியைத்
துய்த்துச் சுவைகண்ட பின்விடு மோசுர ராய்நரரோ
டொத்துத் திரிபவர்க் கன்புசெய் வாரும துண்மைகண்டால்
வைத்துப் பிரிவர்க ளோபிண்டி நீழலெம் மாமணியே.

இ-ள். பிண்டிநீழலிலிருக்கும் பெரிய மணியொப்பாய்! கசந்து விரைவிற் கொல்லும் எட்டிக்காயைத் தின்று உடனே துன்பமுறுமவன் நோய் நீக்கு மருந்தாகிய நெல்லிக்கனியைத் தின்று இன்பங்கண்டபின் அதனை விடப் பொருந்துவனே? அதுபோலே, தாமும் தேவராய் வைத்து மக்களின்பந் துய்த்துத் தெய்வத்தன்மை கெடுமவர்க்குப் பத்திசெய்யப்பட்டவர் உள்ளபடியறிந்தாற் பின்னை உம்மைவிட்டுப் பிரிவரோ? எ-று.

இதனுல் உம்மையறிந்தவர் பிரியாரென்பதாம். இதனுட்காஞ்சிரம் ஆகுபெயராலே எட்டிக்காயாயிற்று. இன்பமென்றதனுலே துன்பம் வருவித்தாம். கரும்புதுய்த்து என்று பாடமோதுவர்; அதற்கு வேம்பே முரண்ஆதலாலே அது பாடமல்லாமை அறிக. 'இனிய வுளவாக வின்னுத கூறல் - கனியிருப்பக் காய்கவர்ந் தற்று' † என்பதனுலும் அறிக. இதனுட் சுவை - இன்பம். திரிதல் - கெடுதல், சுழலுதலுமாம். அன்பு-பத்தி. (அசு)

மணியா பரணமு மாசில்வெண் டுகிலும் பார்மலரு
மணியா தழகிய வண்ணல்கண் டீர்பெண்ணி னுசைவிடாப்
பிணியார் முடையுடற் பேயனை யீர்பிறழ் பூங்கரும்பின்
றிணியார் வரிசிலைத் தேங்கணைக் காமனைச் செற்றவரே.

இ-ள் வடிவுள்ள பேயை ஒப்பீர்! பெண்ணின் ஆசைவிடாதவர் காமனைவென்றவரோ? அன்றன்று; தோற்றவரே: காமமெனும் பெண்ணின் ஆசைவிட்டு ஆபரண முதலிய அணியா அழகர் கண்டீரோ? எ-று.

இதனுல் நீர் சொல்வது அழிவழக்கென்பதாம். வடிவுள்ள பேயென்பது தோன்ற முடையுடற்பேய் என்ருர். 'உலகத் தாருண்டென்ப தில்லென்பான் வையத்—தலகையா வைக்கப் படும்'‡ என்ருராதலின். இதனுள்

† திருக்குறள், ௯௦௦.

‡ திருக்குறள், ௮௫௦.

செற்றவரே என்பது வினவேகாரம். வம்பு - புதுமை. முடை - நாற்றம். பிறழ்தல் - விளக்கம். வரிசிலை - அழகிய சிலை. தேங்கணை - தேனையுடைய பூவாளி. (அஎ)

செற்றது காதிக வொர்ப்பத காதிக டிக்கறியப்
பெற்றது கேவலம் பேசுதல் கேவலம் பெண்முதலாய்ப்
பற்றது தீர்த்தவெம் பாவனை தீர்த்தவெம் பாவமற்று
லற்றதுன் மேற்றுதி யாரையு மேற்றுதி யாட்படினே.

இ-ள். எம்பாவனைக்கியைந்து பெண்முதலாகிய பற்றுக்களை யெல்லாம் தீர்த்த தீர்த்தனே! உலகமறிய நீ கெடுத்தது யாதென்னிற்* காதிகன்மங்கள்; இனிமேற் கெடுப்பது யாதென்னில் அகாதிகன்மங்கள்; நீ பெற்றது யாதென்னிற் கேவலஞானம்; நீ அருளிச்செய்யப்பட்டது யாதென்னில் ஞானம்; இப்பெற்றிப்பட்ட உன்னை எம்போல்பவரும் பாவமறுத்தால் அவரும் நின்னைத்துதிப்பது த்விராநின்றது; நினக்கு அடிமை புகின் யாவரையும் நின்னுடனே உயரப்பண்ணுவை; எ-று.

இதனால், ஈசனாகிய பெரியோன் பிரமனுக்கு ஐந்து முகமாதல் கண்டு பொறாமல், அவன் திலோத்தமை பொருட்டாகத்தோற்றிய மேலாகிய தலையைக் கிள்ளினான் என்பர்; நீ அறியாமையால் யாரையும் உயரப்பண்ணுவை யென்பதுபோலப் புகழ்தலாம். இதனுள் திக்கு - உலகம்; இதனையெங்குந் தீவமாக்குக. தீர்த்தல் - ஒழிதல். பாவனை - தியானம். யாரையுமேற்றுதி - யாரையுஞ் சமமாக உயரப்பண்ணுவை. (அஅ)

படினும் படார்தவம் பாத்துண் பதுமிலர் பார்த்திபரீர்ந்
தடினு மடாதன செய்கையஞ் சாரடி யார்தமன்பு
கெடினுங் கெடாவருட் கேவலி போலயற் றேவர்நல்கார்
விடினும் விடார்கண்†மித் தாக்கள்கர்த் தாக்கள்கொல் வெவ்வினை [க்கே.

இ-ள். மிச்சத்தர் தவம்பண்ணுவாரைப் போலே வினைக்கே வேடங்கொள்ளினும் நல்ல தவத்துறை புகுதார்; நற்றானம்பண்ணார்; அறத்திற்காகாவென்று விலக்கிய கொலை, பொய், களவு, காமம், அவாமுதலிய தீமை செய்தால் அக்குற்றத்திற்கு அரசராமவர் தமதுடலை அரிந்துகொன்றாலும்

---

* ஞானவரணீயம், தரிசனவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷியம், நாமம், கோத்திரம், அந்தராயம் எனப்பட்ட அஷ்டவிதகர்மங்கள்.

† "மிச்சத்தர்கள் கர்த்தர்கள் வெவ்வினைக்கே" எனவும் பிரதிபேதம் உண்டு.

அத்தீமை செய்தற்கோ அஞ்சார்; அடியார் தம்மேல் அன்பு கெட்டாலும் கெடாத அருளையுடைய கேவலஞானியைப் போலே, ஒழிந்ததேவர் பயன் படாவிடினும் அவரைக் கைவிடமாட்டார்; அதனால் அவர் பாபவினைக்குத் தலைவர் போலே இருந்தது; எ-று.

இதனால், அவர் பாவவினை நீங்கவேண்டில் அத்தீமை செய்வரோ என் பதாம். வேம்பு பழுத்தாற் காக்கைக்கிரையாம்; அதுபோலே மதுமாங்கிச ங்களை நுகர்பவர்க்கல்லது ஸத்பாத்திர தாநம் இலராதலிற் பாத்துண்பதுமில் லையென்றார். பார்த்திபரீர்ந்தடினும் என்பதனாலே அவர் குற்றங்கண்டே தண்டிக்கவேண்டலிற் கொலைமுதலிய வருவித்தார். அவர் நூல் கொலைப் பாவம் விலக்காவாதலிற் கேட்டைப்பண்ணுவது குறித்துப் பயன்படாவிடி னும் என்றார். பாத்தல் - பகுத்தல். பார்த்திபர் - அரசர். நல்கல் - பயன் படல். (அகூ)

விணைவரு மாறு மவைவெல்லு மாறுமித் தாச்சமயத்
தனைவரு மாறு கொளநிற்கு மாறு மூலகமெல்லா
நினைவரு மாறு பொருணிற்கு மாறு நிறைந்தநன்னூற்
புனைவரு மாறு புகுகடல் போலுமெம் பூரணனே.

இ-ள். நல்வினை தீவினை வரும்வழியும் அவற்றைப்போக்கும் வழியும் பரசமயத்துளெல்லாரும் மாறுபட நிற்கும் வழியும் உலோகம் அலோகமெ லாம் நினைத்தற்கரிய †சீவாதி முதலாகியவாறுபொருளுள்ள வழியும் ஆகிய இவற்றாலே நிறைந்தநன்றாய பரமாகமமாகிய நூலைமேற்கொண்டு வருவது ஓராறுபுகும் ஒருகடலையொக்குமவன் ஆதலாலே பூரணனென்னும் நாம மாயிற்று எ-று.

இதனால், இவனே நிறைந்தவன் என்பதனாலே பற்றுள்ளோர் குறைந் தோரென்பதாம். (கூ0)

பூரணை யாற்பதி னாற்கயிற் றேக்கப் புவனமெல்லாம்
நீரணை மாருதந் தாங்கிய தொக்கு நிவந்தசிங்கப்
பேரணை யார்க்கிணை யாருமில் லாப்பெரி யோர்க்குவிண்ணோர்
பாரணை யாவடி தாங்கச்செந் தாமரை பாரித்ததே.

இ-ள் ஒப்பு ஒருவரு மில்லாமையாலே சிங்காசனத்திருந்த பெரியோர் க்கு நிலந்தோயாத் திருவடிகளைத் தாங்குதற்குத் தேவர்கள் பொற்றாமரைப்

† சீவம், புற்கலம், தருமம், அதருமம், ஆகாசம், காலம் என்பன. இவற்றை ஷட்திரவியம் என்ப.

பூவைப் பண்ணினது என்போலுமென்னிற், பதினாலு கயிற்றின் உயரத்தையுடைய உலகமெல்லாம் முறையிலே கிட்டிக் காற்றான் அவை தரித்தது ஒக்கும்; எ-று.

இதனால் வெறுமையில்லை யென்பதாம். இதனுள் பூரணை - நிறைவு. நிவப்பு-உயர்வு. பாரணையா-நிலந்தோயா. † பாரித்தல்-பண்ணல்; பரப்புதலுமாம். நீரணை-குணம் அணைந்த; குணம்-குளிர்ச்சி, மணம். (கக)

பாரிடை யீரிரு நூற்றைம்பத் தெட்டுப்பத் தாம்பவணத்
தோரெழு கோடியெண் ணைன்பா னிலக்க முயர்ந்தகற்பத்
தோரியல் யோனிதொள் ளேழா யிரச்சின்ன மெண்ணவொண்ணு
சிரிய வந்தரர் சோதிடத் தீசர்நற் சேதியமே.

இ-ள் சினேந்திரரது இயற்கை செயற்கைச் சினாலயம் பூமியிடத்திலே நானூற்றைம்பத்தெட்டு, பத்தடுக்காயிருக்கின்ற பவணலோகத்திலே எழுகோடியே யெழுபத்திரண்டு நூறாயிரம்; உயர்ந்த தேவலோகத்தில் எண்பத்துநான்கு நூறாயிரத்துத், தொண்ணூற் றேழாயிரத் திருபத்து மூன்று; இப்பால் வியந்தரலோகம் சோதிடலோகம் இரண்டினும்எண்ணமுடியா;‡ எ-று.

இதனால் மூவுலகத்தினும் கோவற்றலிங்கம் இல்லை யாதலால் இவனே தலைவன் என்பதாம். இதனுள் யோனி-எண்பத்துநான்கு நூறாயிரம்; குறிப்பு மொழி. வந்தரர்-வியந்தரர். சின்னம் என்பது இருபத்துமூன்று என்னுங் குறைந்த எண்ணைக்காட்ட வந்தது. (கஉ)

சேதிய முப்புவ னத்திரு கூற்றமுந் தீர்த்தருள்ளிட்
டேதில் குணத்தர் வணக்கமொ ரைந்து மியற்பெயரோ
டாதி யெழுத்து மருகனு மவ்வுமொன் றாதியைந்தீ
ரோதி நினைப்பன் வினைத்துக ளோடி யொளித்திடவே.

இ-ள். இயற்கை செயற்கையாய் இருகூறுபட்டு முன்னிற் கவியிற் கூறிய ஆலயந்தோறும் இருக்கப்பட்ட அருகத்தேவருள்ளிட்ட ஒப்பற்ற குணங்களையுடையவர் நமஸ்காரம் ஓரைந்தும் இயல்பாகிய பெயருள் அருக என்னுந் திருநாமமும் மகாரமுதலாகிய இவையிற்றை ஒன்றுமுதலாக ஐந்தி

† "தானி லந்தோயாக் கடவுளை" என்பது நாலடி, கடவுள் வாழ்த்து.

‡ இவ்வுலகியல்பெல்லாம் லோகாணி என்னும் நூலுட் காண்க.

றுதியாகச் சொல்லி நினைப்பன்: யாதோகாரணமென்னில் எனது வினையாகிய குற்றம் விரைய ஒளித்தல் காரணம்; எ-று.*

இதனால் நிலையில்லாத செல்வம் வேண்டியல்ல என்பதாம். இதனுள், சேதியம்-கோயில். முப்புவனம் - மூவுலகு. தீர்த்தர்-அருகர். (சுரு)

ஒளிவந்த நீழ லுயர்பிண்டி வேந்த னொருத்தனுமே
விளிவந்து வேண்டும் விபூதிக ணல்குமெய்ப் பொய்யைநம்பிக்
களிவந் தவாவொடு கைவந்த வாசெய்யுங் கையர்பின்போ
யிளிவந்து வாழ வருமந்த வாருயிர்க் கென்வந்ததே.

இ-ள் பிண்டிவேந்தன் ஒருத்தனுமே முன்னின்று தான் விரும்பிய செல்வத்தைத் தருவன்; அவனது நூலைப் பின்செல்லாதே உடம்பாகிய பொய்யை நம்பிச்செருக்கி அவாவுடனே தாம் வேண்டியவற்றைச் செய்கின்ற திருடர் பின்னே போய் இளிவரவு பொருந்திய வாழ்வு பெறுதலாற் பெறுதற்கரிய உயிர்க்கு வந்தபயன் யாது? எ-று.

இதனாற் பொய்ப்பொருளைப் போற்றுமுலகம் விடுமது பற்றுமது அறியா என்பதாம். இதனுள் வேறில்லை யென்பது தோன்ற ஒருத்தனுமென்றும், அன்பராமவர் பரியாளமாகி யேவல் கேட்பவொன்றவர் கூறலின் இளிவந்து வாழ என்றும் கூறினார். (சுசு)

வந்தன வெண்ணரை போயிற்று வாமக்கள் யாக்கைபெற்று
நந்தன மாவொன் றுநாடிற் றிலப்பிண்டி நாதனைச்சேர்ந்
துய்ந்தன மின்றுபண் டோதனந் தின்றின்சொ லார்தனஞ்சேர்ந்
திந்தன மாகநற் சந்தன வேர்பெற் றெரித்தனமே.

இ-ள் வெள்ளிய நரைபொருந்திய மூப்புவந்து இளமை கழிந்தது; பெறுதற்கரிய மக்கள்யாக்கையைப் பெற்றுவைத்தும் நமக்கு ஒரு பொருளாக ஒன்றைத் தேடிற்றிலேம்; பிண்டி நீழலின் கீழேயிருக்கிற அருகத்தேவனைச் சேர்ந்து இன்று பிழைத்தோம்; சோற்றைத்தின்று அழகிய சொல்லையுடைய மகளிருடைய் தனத்தைச் சேர்ந்து நன்றாகிய சந்தனவேரைப் பெற்று விறகாக எரித்துவிட்டேம்; எ-று.

---

* "அருகர், அசரீரி, ஆசிரியர் ஆகிய இவ்வியற்கைப்பெயர்களிலே முதலெழுத்துக்களும் உபாத்தியாயரின் முதலெழுத்தாகிய உகரமும் முனிவர்களின் முதலெழுத்தாகிய மகர வொற்றும் எனப்படுகின்ற இவைகளைஒன்று முதலாய் ஐந்து இறுதியாகச் சொல்வதனால் உண்டாகிய ஓங்காரத்தை முச்சந்தியிலுந்துதித்துத் தியானிப்பேன்" என வுரைப்பர்.

விருப்பத்தை மிகுவிக்கின்ற நெய்யோடுகூடிய சோற்றினை ஓதனம் என்றார். (கூரு)

எரிதின்று போத லிழுப்புண்டு போதலின் ஞயொடுபன்
னரிதின்று போதலல் லான்மெய்நில் லாநமன் றூதர் வந்தா
லரிதின்று போதுத லென்னவொண் ணுதத னுக்குமுன்னே
கரிதின்றி டாவரி யேந்தணை யானறங் கைக்கொண்மினே.

இ-ள். நெருப்புத் தின்றுபோதல் திரண்டவுடனே பல நரிகளுமாக ஒக்க இழுப்புண்டுபோய்த் தின்று போதலல்லது யாக்கைநிலைபெறுது; எத்தாலும் கூற்றுவனுடைய தூதர்கள் வந்தகாலத்து இன்று வரத்தகாதெ ன்றுசொல்லவொண்ணுது; அந்தக் கூற்றுவனுடைய தூதுவர்கள் வருவதற் குமுன்பே யானையைத் தின்றிடாத சிங்கம் ஏந்தப்பட்ட அணையையுடைய அருகத்தேவனுடைய ஸ்ரீதர்மத்தைக் கைக்கொள்ளுவீர்களாக; எ-று. (கூசு)

கொண்மூ வொருபரு வம்பொழிந் தாங்கிரு கொட்பினுட்பா
ருண்மூ விருவகைக் காலத் திடையுல குய்பக்கொள்ளு
மெண்மூ வருமல்ல *தீசரல் லாமைநல் லீசரென்று
திண்மூ டர்கதொழுந் தேவர்மெய் காட்டித் தெளிவிப்பரே.

இ-ள். மேகம் ஒருகாலத்தைக்குறித்துப் பெய்தாற்போல §ஏறுகாலம் இழிவுகாலமாகிய இரண்டு சுழற்சியையுடைய பூமியிடத்து மூவிரண்டாறு காலத்துக்கு நடுவே உலகத்தைப் பாதுகாக்கிற இருபத்துநாலு தீர்த்தகாரு மல்லது இறைவரல்லாமையை நன்றுகிய இறைவரென்று சொல்லித் திண் ணிய மூடராயிருப்பார் வணங்குகிற இறைவர் தம்முடைய மேனியைக்கா ட்டி அறிவித்து விடுவர் எ-று. (கூஎ)

தெளிக்குந் திருமொழித் திக்குடைத் தொல்சக முக்குடைக்கீ
ழளிக்குந் திருவரு ளாழியெம் மானடி யைம்புலநீர்க்
குளிக்குந் திரிவிதக் குற்றத்து மும்மதத் தெம்மனமாங்
களிக்குஞ் சரமணைக் கும்பணைத் தாளிணைக் கந்துகளே.

இ-ள் தெளிவிக்கிற திருவாக்கினையும், திக்காகிய ஆடையினையும், பழையவுலகத்தை மூன்று குடையின் கீழே பாதுகாக்கிற தரும சக்கரத்தை யுமுடைய அருகத் தேவருடைய ஸ்ரீபாதங்கள், ஐந்து விஷயங்களாகிய நீரி

---

* தீசரல்லாரை எனவும் பாடம்.

§ உற்சர்ப்பிணி, அவசர்ப்பிணியாகிய சுழற்சி எனவும் உரைப்பர்.

லே முழுகுகிற காமம் வெகுளி மயக்கமென்கிற குற்றமாகிய மூன்று மதத்தையுடைய என்னுடைய மனமாகிய களிப்பையுடைய யானையை அணைக்கின்ற பெரியதாளினையுடைய இரண்டு தம்பங்களாம்; எ-று. (கூஅ)

கந்தா திகளென் கசிந்தநெஞ் சாகக் கடிநறும்பூஞ்
*செந்தா தியைபிண்டி யார்திருப் பாதத்துச் சேர்த்துமின்சொ
லந்தா தியையணி மாமல ராக வணிந்தடியேன்
முந்தாதி வல்வினை வெல்வனெல் லாரினு முந்துறவே.

இ-ள் கந்தமுதலாயினவை என்னுடைய கசிவுற்ற மனமாக, மணமிக்க பூவினது சிவந்ததாது பொருந்தப்பட்ட பிண்டி நீழலின்கீழே இருக்கும் அருகத் தேவனுடைய அழகிய சீபாதத்திலே சேர்த்துச் சொல்லப்படுகிற இனிய சொல்லையுடைய அந்தாதியைப் பூவாக அணிந்து அடியேனாகிய யான் முற்பட்ட பழைய வினையைக் கெடுப்பன் எல்லாரினும் முற்பட; எ-று.

முந்து என்பதும் ஆதி ஒன்பதும் ஒரு பொருட் கிளவி. (கூகூ)

முந்திய பேரன்பின் மூவுல கேத்த முனீந்திரரோ
டெந்தை பிரானங் கெழுந்தரு ளும்பொழு தேறவங்கோர்
தந்தி பொருதென்றும் வாசி பொருதென்றுந் தாழ்வுடையேன்
புந்தி பொருதென்றுந் தேவர்பொற் றாமரைப் பூக்கொண்டதே.

இ-ள் முற்பட்ட பெரிய அன்பினையுடைய மூன்றுலகத்துள்ளவர்களும் புகழ்செய்ய முனிகளும் இந்திரர்களுமாகிய தேவர்களுடன் கூட எம்முடைய சுவாமி அவ்விடத்துத் திருவுலாச்செய்யும் பொழுது ஏறுதற்கு அங்கொரு யானைபெருமலல்ல; குற்றமுடையேனுடைய புந்தி பொருதபடியினாலேயன்றோ தேவர்களாலே நிர்மிக்கப்பட்ட பொற்றாமரைப் பூவின்மேலே எழுந்தருளினது; எ-று. (க00)

பூக்கொண்டு நாளும் புனிதன் றிருவறம் போற்றிநின்று
நாக்கொண்ட செஞ்சொ லவிரோதி நாத னவின்றமெய்ந்நூற்
பாக்கொண்டு நாளும் பணிந்து நினைந்தும் படிக்கவல்லார்
தீக்கொண்ட வல்வினை சேரார் சிவகதி சேர்குவரே.

சிந்தா குலமில்லைத் தீவினை போஞ்செய்ய தாமரையாள்
வந்தா தரிக்கு மடநெஞ்ச மேமற வாதிருக்கக்
கொந்தா ரலங்கற் குடையொரு மூன்றுடை யான்குணத்தை
யந்தாதி யாக வவிரோதி யோதிய வாகமமே.

திருநூற்றந்தாதி மூலமும் உரையும் முற்றின.

---

* "செந்தாதியல்" எனவும் பாடம்.

ஸ்ரீ:

கடவுள் துணை.

பன்னிரு பாட்டியல்.

பாயிரம்.

சொல்லின் கிழத்தி மெல்லிய லிணையடி
சிந்தையில் வைத்து முன்னோர் பொருணெறி
கூட்டி யுரைப்பல் பாட்டியன் மரபே.

எழுத்தியல்.

க. ஏத்திய வோத்திய லெழுத்திய லியம்பிற்
பிறப்பும் வருணமுஞ் சிறப்பாங் கதியு
மிருவகை யுண்டியு மூவகைப் பாலும்
பொருவி றூனமுங் கன்னலும் புள்ளு
நயம்பெறு நாளு மியம்புதல் கடனே. (க)

க.—பிறப்பு.

உ. சிறப்புடை யெழுத்தின் பிறப்பினி துரைப்பின்
முந்நான் குயிரு முதல்வன் படைத்தனன். (க)

ங. நல்லுயிர்ப் பகுதி நான்முகன் படைத்தனன்:
பொய்கையார். (உ)

ச. கண்ணுத றிருமால் கதிர்வேன் முருகன்
விண்ணவர் தலைவன் வெங்கதிர் வெண்மதி
*திதிக்கோன் கூற்றுவ னெடுநீர் வருண
னென்னுங் கடவுள †ரீரிரண் டாக
மன்னிய வொற்று ‡வகைவேறு படைத்தனர். (ங)

ரு. ஒன்பது தேவரு முடம்பு படைத்தனர்:
பொய்கையார். (ச)

---

* நிதிக்கோ னியமன் எனவும் பிரதிபேதம்.

† ரிரண்டிரண்டாக பி-ம்.

‡ வகை படைத்தனரே பி-ம்.

உ.—வருணம்.

சு. நறுமலர்த் திசைமுக னீச னாரண
னறுமுகன் படைத்தன வந்தணர் சாதி.

அவை :—அகரமுதற் பன்னீருயிரும், க, ங, ச, ஞ, ட, ணவும். (க)

எ. திருமா லரனே திசைமுகன் குமரன்
மரபிற் படைத்தன மறையவர் சாதி :

பரணர். (உ)

அ. இந்திரன் வெங்கதிர் சந்திரன் படைத்தன
துன்னருஞ் சிறப்பின் மன்னவர் சாதி.

அவை :—த, ந, ப, ம, ய, ர. (௩)

௯. இந்திர னிரவி சோமனிம் மூவர்
தந்த வெழுத்தே யரசர் சாதி :

பரணர். (ச)

க0. திருமிகு நிதிக்கோன் வருணன் படைத்தன
வணிமிகு சிறப்பின் வணிகர் சாதி.

அவை :—ல, வ, ற, ன. (ரு)

கக. வருண னிதிக்கோ னென்றிவர் படைத்தன
வசைதீர் சிறப்பின் வணிகர் சாதி :

பரணர். (சு)

கஉ. கூற்றுவன் படைத்தன கூற்றன விரண்டு
மேத்திய மரபிற் சூத்திரர் சாதி.

அவை :—ழ, ள. (எ)

க௩. இயமன் படைத்த விருவகை யெழுத்துந்
துகடீர் மரபிற் சூத்திரர் சாதி :

$பரணர். (அ)

கச. ஒற்றுமைக் காலையும் வேற்றுமைக் காலையும்
பிறவியும் வருணமும் பெறுமென மொழிப. (௯)

$ இது வேறொரு மதம் எனவும் பி-ம்.

கரு. உயிர்மெய் போல வொற்றுமிம் முறைபெறும். (௧௦)

க௬. உயிர்மெய் வழக்க மெய்வழக் காகும்
வேற்றுமைக் கண்ணே யென்றூர் பிறரும். (௧௧)

க௭. நால்வகை வருணத் தோர்க்கு நால்வகை
யியம்பு மெழுத்தை யியம்புவர் முதன்மொழி
மற்றவை மயங்கினும் வரையா ராண்டே. (௧௨)

க௮. மக்கட் சாதி நான்கிற்கும் வகுத்த
தத்தஞ் சாதி யெழுத்தே யவரவர்க்கு
வைத்துமுன் னெடுப்பி னதுமாண் புடைத்தே
மயங்கினும் வரையார் பயன்பட வரினே :
இந்திரகாளியார். (௧௩)

௩.—கதி.

க௯. வானவர் மக்க ணரகர் விலங்கென
வூனமில் கதியே யொருநான் காகும். (௧)

௨௦. கதியெனப் படுபவை காண்டக விரிப்பிற்
றேவர் மக்க ணரகர் விலங்கென
மேவிய கதிக ளீரிரண் டாகும் :
இந்திரகாளியார். (௨)

௨௧. தேவர் மக்க ணரகர் விலங்கென
மேவிய நான்கே யெழுத்தியல் கதியே :
பரணர். (௩)

௨௨. அவற்றுள், உயிர்கருறில் வல்லின மீற்றெழுத் தொழியப்
பயிர்ப்புறு வானவர் கதியெனப் படுமே. (௪)

௨௩. தேவர் கதியே தெரியுங் காலை
அஇ உஎ கசட தபவே :
பரணர். (௫)

௨௪. மக்கட் கதியே நெட்டுயிர் நான்கொடு
மிக்க சிறப்பின ஙஞண நமவே. (௬)

௨௫. அவை தாம்;—ஆஈ ஊஏ ஙஞண நமக்கள். (௭)

உசு. ஒழிந்தன ஐஔ ஆய்த வெழுத்துங்
கழிந்தன வளனவு நரகர் கதியே. (அ)

உஎ. எ ஒ விரண்டும் யரல றழவெனத்
தொக்கன வைந்தும் விலங்கின் கதியே. (கூ)

உஅ. மன்னுவர் தேவர் மக்கள் செய்யுளுண்
மன்னர் விலங்கொடு நரகர் கதியே. (க0)

உகூ. விலங்கு ¶நரகும் விலங்கின வென்ப:
இந்திரகாளியார். (கக)

ங0. ||நரகும் விலங்கும் வரைவ ரீண்டே
தேவரு மக்களு மேவின பாட்டே. (கஉ)

ச.—உண்டி.

ஙக. அமுதென விடமென வருமிரு வகையு
முணவெனப் புலவ ருரைத்தன ருளரே. (க)

ஙஉ. நஞ்சென வமுதென நவிலவும் படுமே:
பொய்கையார். (உ)

ஙங. உணவே யமுதம் விடமு மாகும்:
அவிநயனார். (ங)

ஙச. உயிர்க்குறி ஞன்கொடு கசதப நமவ
*மயக்கற வமுத வெழுத்தாகு மென்ப.
அவை :—அ, இ, உ, எ, க, ச, த, ப, ந, ம, வ. (ச)

ஙரு. இவ்வுயிர் மெய்யோ டியைந்தன கொளலே. (ரு)

ஙசு. ஆஃ விரண்டும் யரல மூன்றுந்
தாவிலிவ் விருவகைக் கூட்டத் தியைந்தவு
மளவு மாய்தமு மைவகைக் குறுக்கமு
†முளமலி புலவ ருரைத்தனர் நஞ்சென்
றவையொரு பெயர்மருங் கணைய நிற்பி
‡னவையுறு துஞ்சலு நடுக்கமுஞ் செய்யும். (சு)

¶ || நரகரும் பி-ம்.
* எனப்பதி ஞென்று மமுதென மொழிப பி-ம்.
† முளமகிழ் பி-ம்.
‡ னவையுறத் துஞ்சலுங் கெடுதலுஞ் பி-ம்.

௩எ. இருவகைக் கூட்டத் தியைந்தமேற் கூறிய
ஆகார வோகாரத் தொடுய ரலக்க
ளென்னு மொற்றொடு மியைந்தவுயி ரளபெடை. (எ)

௩அ. ஐவகைக் குறுக்கமு மறையுங் காலை
இகர ஒகர ஐகார ஔகார
மகர மென்னு மிவற்றின் குறுக்கம். (அ)

௩௯. ஆ ஓ யரல முதலிய வளபெடை
யாய்தமைங் குறுக்க முளப்பட வெல்லாம்
விடமென மொழிப மெய்யுணர்ந் தோரே:
பரணர். (௯)

௪௦. நஞ்சா மொற்றொடு நடந்த வுயிர்களும்
வஞ்சமில் புலவர் மறுத்தில ரென்ப ; (௧௦)

௪௧. இருவகை யுண்டியென் றெடுத்தன வல்ல
தரமே நிற்பினுந் தோமில வென்ப ; (௧௧)

௪௨. நஞ்சு மமுதா மங்கலம் புகினே ; (௧௨)

௪௩. அமுதெழுத் தென்ற வாதியுயிர் நான்கொடும்
புணர்ந்த மெய்யை யுணர்ந்தமு தென்ப ; (௧௩)

௪௪. மெய்யா மமுதின் மேவிய வுயிரும்
பொய்தீர் புலவர் பொருந்தின வென்ப :
\$இவை இந்திர காளியார். (௧௪)

௫.—பால்.

௪௫. ஆண்பால் பெண்பா லலியென நின்ற
மூன்றே பாலென மொழிந்தனர் புலவர். (௧)

௪௬. இருவகை யைங்குறி லாண்பா லென்ப. (௨)

௪எ. அகரமோ டைங்குறி லென்று ராண்பால். (௩)

\$ "தெரிந்த யாலமேல்" என்னும் வெண்பாவுரையில் இவ்வைந்து சூத்திரங்களையு மெடுத்தோதி இவற்றை இந்திரகாளியமென்றார் வச்சணந்தி மாலையுரைகாரரும்.

சஅ. நெடிலே ழிருவகை பெண்பா லென்ப. (ச)

சகூ. ஒற்று மாய்தமு மலியெனப் படுமே. (ரு)

ரு0. ஒற்றின் வருக்கமு மொன்பதிற் றிரட்டியும்
பெற்ற வாய்தமும் பேடெனப் படுமே. (சு)

ருக. அவ்வவ் வெழுத்தே யப்பாற் குரிய
விரவினும் வரையா ரலியெழுத் தொழித்தே. (எ)

ருஉ. அவ்விரு பாற்கு மலியெழுத் தாகா
தம்முண் மயங்கினுந் ¶தாவின் றென்ப.|| (அ)

ருங. உயிரீ ராறு மாணென மொழிப
வுயிர்மெய் யெல்லாம் பெண்ணென மொழிப்
வுடம்பெழுத் தெல்லா நபுஞ்சக மாகும்:
பொய்கையார். (கூ)

சு.—தானம்.

ருச. குறிலைந் துடனெடில் கூட்டி நின்ற
ஐ ஔ விரண்டும் இ உ வடக்கிப்
பால குமார வரசு மூப்பு
மரணமென் றைவகைத் தானம் வகுத்தனர். (க)

ருரு. முன்பிற் செய்யுண் முதலெழுத் ததற்குப்
பொருத்தமும் விருத்தமும் பகையுங் கொளலே:
அகத்தியர் பாட்டியல். (உ)

ருசு. நட்பே யுதாசி னம்பகை யென்னு
மொப்புடைக் குறிப்பி னொருமூன் றாகும். (ங)

ருஎ. பால குமார வரச வென்னு
மூவகைத் தானமு நட்பெனப் படுமே. (ச)

ருஅ. ஒழிந்த விரண்டு முதாசீ னம்பகை.* (ரு)

¶ தவறின்றதுவே பி-ம்.

|| இது பரணர் பாட்டியல் என்பது "குற்றெழுத்தாடூஉ" என்னும் நவநீதப்பாட்டியலுரையால் விளங்குகின்றது.

* பகையுமாம். பி-ம்.

௫௯. பாட்டுடைத் தலைவ னியற்பெயர் முன்னெழுத்துப்
பால னாக நால்வகை யெழுத்தும்
வட்டமாய் முறைமைபி னியலு மென்ப. (௬)

௬0. பெயர்முத லெழுத்துப் பால னாக
நால்வகை யெழுத்தினும் வட்ட மாக
முறையே நட்புதா சீனம் பகைவரும். (எ)

௬௧. அகரந் தனக்காய நட்பென் றுரைப்ப
விகர வுகரங்க டாம்; (அ)

௬௨. அகரக் கெகர முதாசீன மாகு
மகரக் கொகரம் பகை; (௯)

௬௩. உகர மெகர மெனவிரண்டு மென்ப
விகரந் தனக்காய நட்பு; (௧0)

௬௪. இகரக் கொகர முதாசீன மாகு
மிகரக் ககரம் பகை; (௧௧)

௬௫. உகர வெழுத்துக்கு நட்பாய் வருமே
யெகர வொகரங்க டாம்; (௧௨)

௬௬. உகரக் ககர முதாசீன மென்ப
†வுகரக் கிகரம் பகை; (௧௩)

௬௭. எகரக் கொகர மகரநட் பாகு
மிகர முதாசீன மாம்; (௧௪)

௬௮. எகரந் தனக்குப் பகையென் றுரைப்ப
துகர வெழுத்தென் றுணர்; (௧௫)

௬௯. ஒகர வெழுத்துக் ககர வெழுத்து
மிகர வெழுத்துநட் பாம்; (௧௬)

எ0. ஒகரக் குகர முதாசீன மாகு
மெகரம் பகையா மெனல்; (௧எ)

---

† விகரம் பகையென் றறி பி-ம்.

எக. நட்புப் பகையாம் பகையுநட் பாமவை
வைத்த முறையே ‡கொளல்:
இவை கல்லாடனூர். (கஅ)

எ.—கன்னல்.

எஉ. குணபாற் பரிதி தென்பா லியமன்
குடபால் வருணன் வடபாற் சோமன்
றிசைமுக னடுவாந் தெய்வ நிலைகளிற்
குறிலைந் தமைத்து முதன்மூன் றுங் கொள்கென
நெறியறி புலமை யறிஞர்நேர்ந் தனரே. (க)

எஙு. அருக்க னியமன் வருணன் சோமன்
பிரமனுந் தெய்வ நிலையெனப் பேசுவர். (உ)

எச. அகரமுத லாக முறையா னெய்தவத்
தெய்வந் தம்மேல் வைக்கப் படுமே:
கபிலர். (ஙு)

எரு. உரைத்த குறிலைந் தொரோவொன் றாக
வருக்கனோ டாகுமவ் வாறு நாழிகை. (ச)

எசு. அகரந் தானே யருக்கனோ டுதிப்ப
விகர மின்புற வெய்தி யிருக்கு
முகர நடக்கு மெகர முறங்கு
மொகரந் துஞ்சுமென் றுரைத்தனர் புலவர். (ரு)

எஎ. அவரவர் பெயர்முத லெழுத்துவந் துதிப்ப
வவரவர்ப் பாடி னாக்கந் தருமே:
இந்திரகாளியார். (சு)

எஅ. இராப்பொழு திற்கு மிவ்வகை கொள்க. (எ)

அ.—புள்.

எகூ. ஐவகைக் குறிலு மகரமுத லாக
வல்லூ றாந்தை வலியன் குறுகே
மெல்லியன் மயிலென விளம்பின ரிவற்றின்

---

‡ கொளின் பி-ம்.

விளம்பரம்

ஒருமுறை பாருங்கள்.

கிழ ழமார்க்கட்டுத்தெருவில் நம்முடைய ஜவுளிமளிகை
டு, கும்பகோணம், தஞ்சாவூர், ஆரணி, சேலம்
பழ ளுரசு, உள்ளூர் முதலிய தினுசுகளும் டங்கா
து ப லவிதமானநார்ப்பட்டு, வெண்பட்டு தினுசுகளும்;
அச்சிட ப்பட்ட புதுச்சேரி துண்டுகளும்; பற்பல உப
நாகரீ ஜவுளிதினுசுகளும்; மொத்தமாகவும் சில்லரை
ர் வி லயாக விற்கப்படும். தூலே வியாபாரிகளுக்கு
கள் ே வண்டிய மாதிரியில் உடனேயும் பத்திரமாயும்
பேயபி ள் மார்க்கமாய் அனுப்பப்படும். சாமான்களின்
பவர்களு க்கு இனமாக அனுப்பப்படும்.

கு. தெய்வசிகாமணி பாகவதர்,

டி. லட்சுமண பாகவதர்,

கரூர் ஜவுளிக்கடை மதுரை.

☞ தயவு செய்து தங்களுடைய சினேகிதர்களுக்கு தெரிவியுங்கள்.

உ

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில்,

விற்கப்பெறும் புத்தகங்க

1. ஐந்திணையைம்பது மூலமும் உரையும் ...
2. கஞநூலும், பழையநூல்களினின்று தொகுத்த
   ுள-வளையாபதிச்செய்யுட்களும் அடங்கினது ..
3. புலவராற்றுப்படை [திருக்குருகூர்ச் சிறியஇரத்
   தினகவிராயர் பாடியது] ... ...
4. இனியதுநாற்பது மூலமும் உரையும். ... ...
5. நேமிநாத மூலமும் உரையும். ... ..
6. திருநூற்றந்தாதி மூலமும் உரையும். ... ..
7. மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் புலவராற்றுப்படை
   மூலமும் உரையும் [வா. குலாங்காதிறு நாவலர்
   இயற்றியன] ... ...

இவற்றிற்குத் தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

இங்ஙனம்,

எம். வி. சுப்பிரமணிய ஐயர்,

மதுரைத் தமிழ்ச் சங்க மானேஜர்.